காஞ்சி

ஆசிரியர்: சி.என். அண்ணாதுரை

[redacted]

இதோ ஓர் தேசியத் திட்டம்

தெரியாதா, உங்கள் அண்ணுத்துரை சொன்ன திட்டம்! கசாப்புக் கடை நடத்தச் சொன்ஞர்!! என்று காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சட்ட மன்ற உறுப்பினர் ஒருவர் பேசியதாகப் பத்திரிகைகளில் பார்த்தேன்.

அமைச்சர் அவைமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் எழுந்தபோது, காங்கிரஸ் சட்ட மன்ற உறுப்பினர்கள், தமது கட்சியை ஆதரித்துப் பேச முனைவது இயற்கைதான்!

ஆனல் அந்தப் பேச்சு எப்படி அமைந்திருக்கும் என்று நான் எதிர்பார்த்திருந்தேன் என்ருல் காங்கிரஸ் அரசின் வெற்றிப் பட்டியலை விளக்கிப் பேசுவதாக இருக்கும் என்றுதான்.

அமைச்சர் அவையினை ஆதரித்துப் பேசிடும் அத்தனை பெரிய செயலில் ஈடுபட்டிருக்கும் நேரத்தில், காங்கிரஸ் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு என்னைப் பற்றிய நினைப்பு எழும் என்று நான் எதிர்பார்க்கவுமில்லை; அவ்விதம் எழுந்தாலும் அவர்களுக்கு, நான் சொன்ன பலவற்றிலே, இந்தக் கசாப்புக் கடை பற்றிய நினைப்பு மட்டுமே துடிப்புடன் எழும் என்று துளியும் எதிர்பார்க்கவில்லை.

கசாப்புக் கடைத் திட்டம்தானே உங்கள் அண்ணுத்துரை தந்தது? என்று பேசுவதும், கேலி செய்வதும், சட்டசபையிலே மட்டுமல்ல, வெளி மேடைகளிலும், இப்போது மட்டுமல்ல, முன்புகூட, நடைபெற்று வந்துள்ள நேர்த்தி மிகு நிகழ்ச்சியாகும்.

அன்றும் சரி, இன்றும் சரி, எவர் எத்துணை கேலி பேசிடினும், நான் கூறிய திட்டம் குறித்து நான் வெட்கப்படவில்லை. அதனைக் கசாப்புக் [illegible] வதாலேயே அது கேவலமானதாகி விடாது.

தவளைக் கால்கள், பாம்புத் தோல்கள், ஆமைக்கறி இவற்றை விற்பனைப் பொருளாக்குவதும், அவை பற்றிய புள்ளி விவரங்களைச் சர்க்கார் சேகரித்து வைத்திருப்பதும், அனைவருக்கும் தெரியும். ஆட்டு இறைச்சியை விற்பனைப் பொருளாக்குவதோ, அதனை ஒரு பெருந் தொழில் அளவுக்குக் கொண்டு செல்வதோ, அதனை சர்க்காரே மேற்கொள்வதோ, கேவலமானது என்று நான் கருதவில்லை; பொருளாதார நூற்களைப் படித்தவர் எவரும் அங்ஙனம் கருதமாட்டார்கள்.

இதனை நான் சட்டமன்றத்திலும் விளக்கி இருக்கிறேன்.

கடை—தொழிற்சாலை—தொழிற் கூடம் என்ற சொற்கள், அளவுகளைக் காட்டுவன.

நாள் ஒன்றுக்கு நாலு தகர டப்பாக்கள் தயாரித்துவரும் இடம் தகரக் கடை.

நாளொன்றுக்கு நானூறு டப்பாக்கள் தயாரிக்கும் இடம் தகர தொழிற்சாலை.

நாளொன்றுக்கு நாலாயிரம் டப்பாக்கள் தயாராகும் இடம் தகர தொழிற் கூடம்!

நாள் ஒன்றுக்கு ஒருஆடு இரண்டு ஆடு இறைச்சியாக்கப்பட்டு விற்பனை நடக்கும் இடம், கசாப்புக் கடை.

நாள் ஒன்றுக்கு ஆயிரக்கணக்கான ஆடுகள் இறைச்சியாக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் இடம், இறைச்சித் தொழிற்சாலை.

ஆஸ்திரேலியாவிலும், நியுஜிலாந் [illegible] தொழிற்சாலைகள் பெரிய அளவிலே உள்ளன; பெருத்த இலாபமும் கிடைக்கின்றன.

இந்த விவரங்களையும் நான் சட்டமன்றத்திலே கூறிஇருக்கிறேன். என்றுலும் கசாப்புக் கடைத்திட்டம் என்று கேலி பேசும் நிலையிலிருந்து காங்கிரசார் மாறவில்லை என்பது, இப்போது ஒரு காங்கிரசார் பேசியதிலிருந்து தெரிகிறது.

அது குறித்து, மறுபடியும் எண்ணிப் பார்த்தேன்; ஏன் இது கேலிக்கு உரியதாக, கேவலமானதாகத் தெரிகிறது காங்கிரஸ்காரர்களுக்கு, ஆட்டு இறைச்சித் தொழிலில், கேலி பேச, கேவலப்படுத்த என்ன இருக்கிறது, என்பதுபற்றி, எண்ணிப்பார்த்தேன்.

அமெரிக்காவும் ரஷியாவும், சந்திர மண்டலத்துக்கும் செவ்வாய் கிரஹத்துக்கும் பயணம் செய்யத்தக்க ராக்கட்டுகளையும், அண்டத்தை அழிக்கத்தக்க நீர்வளிக் குண்டுகளையும் தயாரித்து, உலகச் சந்தையில் விற்பனைக்கு அனுப்பிவைக்கும் விதமான 'பெரிய திட்டங்களை'க் கூறிடக் காங்கிரஸ்காரர்கள் துடியாய்த் துடித்துக்கொண்டிருக்கும் போது நான் அவைகளை எல்லாம் திட்டம் என்று ஏற்றுக்கொள்ளாமல், எல்லாத் திட்டத்திலும் மேலான திட்டம் இறைச்சித் தொழிற்சாலைத் திட்டம் என்று பேசிவிடவில்லையே, அப்படியிருக்க, இந்தக் காங்கிரசாருக்கு ஏன், நான் சொன்ன திட்டம் இவ்வளவு எரிச்சலை மூட்டுகிறது, இத்துணை கேலிக்குரியதாகவும் கேவலமானதாகவும் தெரிகிறது என்று யோசித்துப் பார்த்தேன்.

நாங்கள் எத்தனை பெரிய அரசு நடாத்துகிறோம், எமது வல்லமை

(15-ம் பக்கம் பார்க்க)

227



ஏழை எப்படி வாழமுடியும்!

மலர் 1 1—11—64 இதழ் 15

படி அரிசி இரண்டு ரூபாயாமே! மூன்று ரூபாய் அளவுக்கு விலை ஏறும் என்கிறார்களே! இந்த விலை கொடுத்து அரிசி வாங்கி, எப்படி ஏழைப் பாட்டாளி பிழைக்க முடியும். விலையைக் குறைக்காவிட்டால்-கட்டுப்படுத்தாவிட்டால் ஏழைகள் பாடு திண்டாட்டமாகிவிடும். இதற்கு ஏதாவது செய்தாக வேண்டும்.

இவ்விதம் சொல்வதைக் கேட்ட உடன் காங்கிரஸ் அமைச்சர்களுக்குக் கோபம் கோபமாக வருகிறது. விலை ஏறுகிறது ஏறுகிறது என்று கூக்குரலிடுகிறார்கள் உண்மை நிலையைப் புரிந்துகொள்ளாமல். விலை ஏறியது என்பது உண்மை என்றாலும், அந்த அளவு விலை கொடுத்து வாங்கும் 'சக்தி' மக்களிடம் இருக்கிறது. மூன்றணா சம்பாதித்தவனெல்லாம் இப்போது மூன்று ரூபாய் சம்பாதிக்கிறான்! விலை ஏறினால் என்ன என்று கேட்கிறார்கள்.

சட்டசபையிலேகூட காங்கிரசார் சிலர் இது போலப் பேசுகிறார்கள்.

பொருளாதாரத்தத்துவங்களைக் கரைத்துக்குடித்து விட்டோம் என்ற எண்ணத்திலே ஆளுங்கட்சியினர் சிலர் பேசுகிறார்கள், "விலை ஏற்றம் பொருளாதார வளர்ச்சியைக் காட்டுகிறது" என்று.

வேறு சிலர் விளக்கம் தருவதாக எண்ணிக் கொண்டு அரிசி போன்ற உணவுப் பொருள்களின் விலை ஏறுவது நல்லது; தேவையானது; இந்த விலை ஏற்றத்தின் காரணமாகக் கிராமத்தாருக்குப் பணம் கிடைக்கிறது; அது வரவேற்கத்தக்கது என்று கூறுகிறார்கள்.

இவை தவறான வாதங்கள் விளக்கங்கள் என்றாலும், சற்று நாகரிகமான முறையிலே அமைந்துள்ள பதில்கள்.

பொதுவாக, காங்கிரஸ் கட்சிக்காக உழைத்தவர்கள், நாடாளும் நிலைபெற முடியும் என்ற நம்பிக்கை நட்சத்திரம் உதிக்காத காலத்திலேயே, காரிருளில் கானகத்தில் காட்டு மிருகங்களுக்கும் கலங்காது கால் கடுக்கச் சென்றவர்கள், காங்கிரஸ் ஆட்சியிலே இந்தக் கஷ்டம் பிறந்துளதே, வாழ்த்தி வரவேற்றவர்களே மனம் நொந்து தூற்றுகிறார்களே, ஏற்றித் தொழுதவர்கள் எரிச்சல் கொண்டு எதிர்க்கக் கிளம்பியுள்ளனரே, இதனால் காங்கிரசின் எதிர்காலம் பாழ்படுமே என்ற கவலை கொண்டு, பொறுப்புணர்ச்சியுடன் விளக்கம் கூறிட, சமாதானம் தேடிட, ஆறுதல் மொழிந்திட முனைகின்றனர். அவர்களின் போக்கினை உணர்ந்திடவும் முடிகிறது, அவர்களை மதித்திடவும் தயக்கம் எழுவதில்லை. ஆனால் புகுந்ததுகள், பொங்கி எடுத்து வைத்ததும் தின்ன வாய் திறப்பவைகள், காங்கிரஸ் பல ஆபத்துக்களை எதிர்த்து நின்றபோது, தூர நின்று கிடந்தவைகள், இன்று படேலின் வரிகொடா இயக்கத்துக்குத் துணை நின்றவர்கள்போலவும், தண்டியாத்திரையின்போது தடியாகி இருந்தவர்கள்போலவும், பாஞ்சாலப் படுகொலையின்போது பாய்ந்துவந்த குண்டு தனை மார்பில் ஏற்றுக் குற்றுயிராகக் கிடந்து பிறகு பிழைத்தெழுந்து வந்திட்ட பெருவீரர்கள்போலவும், தோற்றம் காட்டிடவும் முடியும் என்ற எண்ணம் கொண்டு, எவரையும்விட மிக வேகமாகக் காங்கிரசை ஆதரித்துப் பேசினால் மட்டும் போதாது, எதிர்ப்பாளர்கள் மீது பாய்ந்து கொத்திக் குதறித் தமது பக்தியை மெய்ப்பித்துக் காட்டிக்கொள்ள வேண்டும் என்ற துடிப்புடன், விலை ஏற்றத்தைக் கண்டித்துப் பேசுவோரை, நாட்டின் பகைவர்கள் — அரசியலில் புரளிகளைக் கிளப்பிவிடுபவர்கள்-நாற்காலிப் பித்தம்கொண்டு அலைபவர்கள் என்றெல்லாம் தூற்றித்திரிவதனைக் காண்கிறோம்.

விலை ஏற்றம் என்பது ஏழையை வாட்டி வதைத்திடும் பிரச்சினை என்பதனை உணர்ந்திடும் கூர்த்தமதி அற்ற காரணத்தாலும்,

விலை ஏற்றம் கட்டுப்படுத்தப்படாவிட்டால் அரசின் அச்சாணியையே வளைத்துவிடும், ஒடித்துவிடும் என்பதனை அறிந்துகொள்ளும் அறிவு அற்ற காரணத்தாலும்,

பொருளாதார வளர்ச்சி ஒரு சீராக, சமூகத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் பரவிடாமல், சில இடங்களிலே மட்டுமே சிக்கிக்கொண்டுள்ள நிலையிலே நாடு இருக்கும்போது விலை ஏற்றம் என்பது, ஏழை எளியோர்க்குத் தாங்க முடியாத சுமையாகி அவர்களின் எளிய வாழ்க்கையை மேலும் பாழ்படுத்திவிடும் என்ற அடிப்படைப் பொருளாதாரத்தைப் புரிந்துகொள்ளும் திறன் இல்லாத காரணத்தாலும்,

எந்த ஆட்சியாளர்களிடம் அடைப்பம் தாங்கி நின்றிடும் ஏவலராகிவிட்டிருக்கின்றனரோ, அவர்தம் எதிர்காலத்தை இருள்மயமாக்கிடுமே, விலை ஏற்றம் கிளறிவிட்டுள்ள எதிர்ப்புணர்ச்சி என்ற கிலி காரணமாகவும்,

விலை ஏற்றம் நியாயம்; தேவை.

விலை ஏற்றம் வளர்ச்சியின் அறிகுறி.

விலை ஏற்றம், வாங்கும் சக்தி வளர்ந்திருப்பதனைக் காட்டுகிறது.

என்றெல்லாம் பேச முற்பட்டுள்ளனர்.

ஏழை குமுறிக்கிடப்பதை, அவன் குடும்பம் கொடுமையின் பிடியில் சிக்கிச் சிதைவதை, அவன் வாழ்வு இருண்டு கொண்டு வருவதைக் காணும் இதயம் படைத்தோர் ஏழைக்காக வாதாடுகின்றனர்; ஆட்சியை நல்வழிப்படுத்த முனைகின்றனர்; கைப்பு மருந்து கொடுத்து உட்கொள்ளச் செய்து நோய் போக்கிட முனையும் மருத்துவர் போன்று, ஆட்சியாளரை இடித்துரைத்து வருகின்றனர்; ஆனால் ஆட்சியாளர்களின் ஆலிங்கனத்தில் சுகம் காண விரும்பிடுவோர், மதுக் கிண்ணத்தைக் கொடுத்து, மயக்கு மொழி பேசுகின்றனர். இதிலே மயங்கிடும் அரசு சாய்ந்திடும் என்பது வரலாற்றிலே பல்வேறு கட்டங்களிலே காணக் கிடைத்திடும்.

இன்று அரிசியின் விலையும், பிற பண்டங்களின் விலையும் ஏறிவிட்டுள்ள அளவு, ஏழையினால் தாங்கிக் கொள்ளக்கூடியதாக இல்லை.

மிக எளிய முறையில் குடும்பம் நடத்துவோர்க்கும், வயிறார உண்டு, மானமார உடைபெற்று, குடி இருக்க வசதி பெற்று வாழவேண்டுமானால், நாளொன்றுக்குப் பத்து ரூபாய் தேவை என்று சொல்லத்தக்க நிலையில், இன்று விலைவாசி ஏற்றம் இருக்கிறது.

கூலி உயர்ந்தது, ஊதியம் உயர்ந்தது என்றாலும், அது, விலை ஏறியுள்ளதற்கு ஈடான அளவிலோ, முறையிலோ, வேகத்திலோ இல்லை என்பதனைக் கருத்துக் குருடர்களும், மமதை மிக்கவர்களும் தவிர மற்ற எவரும் காண்கின்றனர்; எனவேதான் கவலை கொள்கின்றனர்; கலக்கமடைகின்றனர்; ஆட்சியாளர்களைக் கண்டித்துப் பேசுகின்றனர்.

"ஆஹா! எமது காங்கிரஸ் ஆட்சியாளர்களையா கண்டித்துப் பேசுகின்றீர்! விட மாட்டோம்! சகித்துக் கொள்ளமாட்டோம்! இதோ, ஏசல் பாணம், தூற்றல் துந்துபி என்று முழக்கமிடும் நா வாணிபம் செய்திடுவோர், நாசத்தைத் தேடிக் கொடுக்கின்றனர், காங்கிரசுக்கு.

இத்தகையினரும் இதயமற்றோரும்,

படி அரிசி இரண்டு ரூபாயாமே!

ஏழை எப்படி வாழ்ந்திட முடியும்

என்றொருவர் பேசுகிறார் என்றால், உடனே சீறி எழுந்திடுவர்,

யாரிந்த மாமேதை! எவர் இந்த புரளிக் காரர்!

இழுத்து வருவீர் இந்த எதிர்ப்பாளனை!
கண்ட துண்டமாக்கிடுகிறோம், இவர் வாதத்தினை.

என்றெல்லாம் கூறுவர்.

ஏழைக்கு இரங்கும் இதயம் கொண்டவர் என்று ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்; ஆட்சியைக் கவிழ்த்திட, பகை கக்கித் திரியும் பாவி இவன்; இவன் போன்றாரை நடமாட விடுவதே தவறு; இத்தகையோரை இந்த நாட்டிலேதான் உலவ, பேச, எழுத, விட்டுவைத்திருக்கிறார்கள், வேறு நாடுகளில் பிடித்திழுத்துவந்து, சந்தைச் சதுக்கத்தில் நிறுத்தி, சுட்டுக்கொன்றுபோட்டிருப்பர்! என்று முழக்கம் எழுப்பி, அம்முழக்கம், எந்த மந்திரியின் செவியிலாவது வீழ்ந்ததா, அதன் காரணமாக அடுத்த பதவி தமக்குக் கிடைத்திடாதா என்று நோட்டமிடுவர்; அறிகிறோம்: நாடு காண்கிறது.

படி அரிசி இரண்டு ரூபாயாமே! ஏழை என் செய்வான்! என்று பேசினவர், கழகத் தோழர் என்று தெரிந்தால் போதும், பற்களை நறநறவெனக் கடித்தபடி மீசை துடித்திட, கோபம் கொப்பளித்து எழ; தாவுவர், கூவுவர்; பாய்வர் சாடுவர்!

ஆனால், படி அரிசி இரண்டு ரூபாயாமே! ஏழை எப்படி வாழ முடியும்! என்று பேசியவர், கழகத்தார் அல்ல; காங்கிரஸ்காரர்; தலைவர்; பெருந்தலைவர்; எவருடைய கண்பார்வை பட்டால் 'சனம்' ஆகிட முடியுமோ, எவருடைய பக்கம் நின்று பணிவிடை செய்தால் 'பதவி' கிடைத்திடுமோ, எவருடைய பாதம் தாங்கினால் 'பவிஷு' பெற்றிட முடியுமோ, எவர்இன்று கண்கண்ட தெய்வமாக உருவெடுத்து நிற்கிறாரோ, அந்தக் காங்கிரஸ் பெருந்தலைவர், காமராஜர், பேசியது அந்தப் பேச்சு!!

தெரிந்தோ தெரியாமலோ, நா வாணிபம் புரிந்திடுவோர், அரிசி விலை படி இரண்டு ரூபாயாமே! ஏழை எப்படி வாழ முடியும்! என்று கேட்டவர்களை,

அறிவிலிகள்

புரளி செய்பவர்கள்

நாட்டுக்குத் துரோகம் செய்பவர்கள்

என்றெல்லாம், ஏசிப் பேசியுள்ளனர்; அதே பேச்சைப் பேசிடும் காமராஜரையுமல்லவா இத்தனை ஏசல் பேச்சுகளும் சென்று தாக்கிடும் என்பதனை உணர்ந்திட முடியாததால்; அவ்விதமானதொரு விந்தை நிலை எழக் கூடும் என்று எதிர்பாராத காரணத்தால்.

விலை ஏற்றத்தைக் கண்டிப்போர்களைக் கண்டித்துப் பேசுகின்றனர் காங்கிரஸ் அமைச்சர்கள், தலைவர்கள், கைத்தடிகள், என்பதனை அறியாதவரல்ல காமராஜர்! அறிந்த பிறகே அரிசி விலை ஏறிவிட்டதை அவர் கண்டிக்கிறார்!! பொருள் என்ன? விலை ஏற்றத்தைத் தடுத்திடாமல், ஏழையின் இன்னலைத் துடைத்திடாமல், விலை ஏற்றம் ஆபத்து அல்ல, கேடு பயக்காது என்று பேசிடும் காங்கிரசாரின் போக்கைக் கண்டு, 'ஏன் இவர்கள் இத்துணை ஏமாளித்தனமாகப் பேசுகிறார்கள்; இவர்களின் பேச்சைக் கேட்டு ஏழை மேலுமல்லவா எரிச்சலடைவான்; யூகம் துளியும் காணோமே இவர்களுக்கு, என்று எண்ணி, இவர்களைக் கண்டிக்கக் கிளம்பிவிட்டார் என்பதுதான் காமராஜரின் பேச்சின் உட்பொருள்.

காமராஜரின் இந்தப் பேச்சைக் கேட்ட பிறகு, இதுவரை இதுபோன்ற பேச்சைக் கண்டித்துப் பேசியதை எண்ணி எண்ணி, வெட்கப்படுவரோ, துக்கப்படுவரோ, அச்சம் கொள்வரோ, அசடு ஒழுகிடும் முகத்தினராவரோ, நாமறியோம்.

காமராஜர் கேட்டுள்ளதனை நாமும் கேட்கிறோம், நாடு கேட்டுக்கொண்டு வருகிறது,

"அரிசி படி இரண்டு ரூபாயாமே விலை!
ஏழை எப்படி வாழ முடியும்?"

கைதி எண் 6342

2—3—64

தம்பி!

நலிவுற்றுக்கிடக்கும் காங்கிரஸ் கட்சிக்குப் புது வலிவு ஊட்டும் மருத்துவர் என்று, கொண்டாடப்படும் அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் காமராஜர் எல்லா அரசியல் பிரச்சினைகளையும், சிக்கல்களையும், ஒதுக்கி வைத்துவிட்டு, சென்னை மாநகராட்சி மன்றத்திலிருந்து, தி. மு. கழகத்தை ஓட்டிக் காட்டுகிறேன், என் புகழை நிலைநாட்டுகிறேன் என்று சூளுரைத்துவிட்டவர்போல, பம்பரம்போலச் சுழன்று ஒருவார காலம், தேர்தல் காரியத்தைத் தாமே கவனித்தார்; மேடைகளிலே பேசுவது மட்டுமின்றி, வீடுவீடாகச் சென்று வாக்காளர்களைக் கண்டு பேசினார், அவருடைய மிகப்பலமான முயற்சியை எதிர்த்து நின்று, தி. மு. க. மகத்தான வெற்றியைப் பெற்றுக்காட்டிற்று; முசுலீம்லீகும் சுதந்திரக் கட்சியும் துணை நின்று, மக்களாட்சி முறைக்குப் புதிய தெம்பு ஏற்படச் செய்துள்ளனர்; இந்த மகத்தான நிகழ்ச்சியையும் இதிலிருந்து பெறத்தக்க அரசியல் கருத்துக்களையும் எடுத்துக்கூற, திராவிட முன்னேற்றக் கழக அவைத் தலைவரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான நாவலர் பேசுகிறார், அகில இந்திய முசுலீம்லீக் தலைவர் காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் கருத்துரை வழங்குகிறார்; சுதந்திரக்கட்சி செயலாளர் மாரிசாமி சொற்பொழிவாற்றுகிறார், கழகச் செயலாளர் நடராசன், சிற்றரசு, சத்தியவாணி ஆகியோருடன் கழகப் பொருளாளர் கருணாநிதியும் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நல்லுரையாற்றுகிறார்கள், சென்னை கடற்கரையில், மிகப் பெரிய கூட்டத்தில். இதுபற்றிய செய்தியை, இந்நாட்டு இதழ்கள் எந்த முறையில் வெளியிட்டன என்பதை இன்று பார்த்தபோது, உள்ளபடி மனம் நொந்துபோயிற்று. அரசியல் பண்பு இந்த அளவுக்கா பட்டுப்போய்விட வேண்டும். கழகம் வளருவதற்குத் துணைபுரியத்தான் மனமில்லை என்றாலும், வளர்ந்துவிட்ட கழகத்தை அதன் வளர்ச்சியின் அளவுக்கு ஏற்ற விதத்திலாகிலும், மதிப்பளித்து, பண்புள்ள அரசியலை, இந்த இதழ்கள் உருவாக்க வேண்டாமா; என்பதை எண்ணி மிக்க வேதனைப்பட்டேன். தமிழகத்தில் தனிப்பெரும் எதிர்க்கட்சியாக வளர்ந்துவிட்டிருக்கிறோம், மாநகராட்சி தேர்தலில் வெற்றி ஈட்டிக் காட்டினோம், என்றால், அந்த அளவுக்குப் பொதுமக்களின் நல்லாதரவு, தொடர்ந்து தி. மு. கழகத்துக்குக் கிடைத்துக்கொண்டு வருகிறது என்பதல்லவா பொருள்? இந்தநிலை அடைந்துள்ள கழகத்தை இன்னமும், தங்கள் கோபப் பார்வையாலும், அலட்சியப் போக்கினாலும், புருவத்தை நெரிப்பதாலும், பொசுக்கிவிடலாம் என்று எண்ணுவது எத்துணை பேதமை! கழகத்தை இழிவுபடுத்துவதாக எண்ணிக்கொண்டு சில இதழ்கள் மேற்கொள்ளும் போக்கு, உள்ளபடி மக்களாட்சி முறையை, மக்களை இழிவுபடுத்துவதுதானே. கழகத்துக்கு ஆதரவு தரும் பல இலட்சக் கணக்கான மக்களை, கேவலம் என்று கருதும் போக்குதானே இது? இதனை மக்கள் எண்ணிப் பார்க்கமாட்டார்களா? என்பதுபற்றி எல்லாம், நாங்கள், இங்கு பேசிக்கொண்டோம்.

மொழிகாத்திடும் தூயநோக்குடன் தன்னைத்தானே தீயிலிட்டுக்கொண்ட தியாகச் செம்மல் சின்னசாமி பற்றி, நாலு நல்லவார்த்தை எழுதக்கூட மனம் வரவில்லையே இந்த இதழ்களுக்கு. தியாகத்தைக்கூட அல்லவா, பழிக்கிறார்கள், என்று எண்ணி, மிக்க வேதனையுற்றோம். நான் சொன்னேன், இதழ்களில் சின்னச்சாமி இடம் பெறாமலிருக்கலாம்; ஆனால் தமிழ் உணர்வு உள்ளோர் இதயங்களிலெல்லாம் இடம்பெற்றுவிட்டான்—சின்னச்சாமி உயிருடன் இருந்த நாட்களில் கழகத்திலுள்ள பல இலட்சம் இளைஞர்களில் ஒருவன்—குறிப்பிடத்தக்க நிலையைக் கழகத்தில் பெற்றவனாகக்கூட இருந்ததில்லை:— ஆனால் தியாகத்தீயில் குளித்த அந்தத் தீரன் இன்று கழக வரலாற்றிலே மட்டுமல்ல, தமிழக வரலாற்றிலேயே ஓர் உன்னதமான இடத்தைப் பெற்றுவிட்டான்—இதழ்கள் அந்த இணையற்றவனைப் பற்றி எழுதாவிட்டால் என்ன, அவன் தன் பெயரை வரலாற்றிலே பொறித்துவிட்டான், என்று கூறினேன்.

காங்கிரஸ், இயக்கம் நடத்திய நாட்களில், இதழ்கள் கொடுத்துவந்த சிறப்பிடத்தை விளக்கும் சம்பவங்களில், எனக்குத் தெரிந்த சிலவற்றை எடுத்துச் சொன்னேன். நம்முடைய இயக்கம் நடாத்தும் அறப்போர்பற்றி, இதழ்கள் காட்டும் இருட்டடிப்பு மனப்

பான்மை, நமது கழகத்துக்கு ஊறு உண்டாக்காது; ஏனெனில் நமது தோழர்கள் பலப்பல ஆண்டுகளாக இந்த இருட்டடிப்பைக்கண்டு, முதலில் வெகுண்டு, பிறகு அந்தப் போக்கைப் புரிந்துகொண்டு, இப்போது அதனைப்பொருட்படுத்தாத நிலையைப் பெற்றுவிட்டனர். நம்முடைய செய்திகள் நம்முடைய இதழ்களிலேதான், செம்மையான முறையிலே வெளியிடப்படும் என்ற பொது உண்மையை அவர்கள் உணர்ந்துகொண்டார் கள்; ஆகவே பத்திரிகைகளின் இருட்டடிப்பினுல் கழகத் துக்கு எந்தக்கேடும் வந்துவிடாது; ஆனுல், இந்த இதழ் களிலே பல, இந்தி ஆதிக்கம் கூடாது என்ற கருத்து கொடுண்டுள்ளன; அந்தக் கருத்துக்கு மதிப்பு அளிப் பதானுல், இந்தி எதிர்ப்பு உணர்ச்சி தமிழகத்திலே எவ் விதம் கொழுந்துவிட்டு எரிகிறது என்பதை, இந்தி ஆதிக்கக்காரர்கள் உணரும்படியாக, செய்திகளை வெளியிடவேண்டாமா! அவ்விதம் செய்திகள் வெளிவந் தால்தானே டில்லி அரசு, மொழி விஷயமாகக் கொண் டுள்ள போக்கிலே மாறுதல் ஏற்படும்? ஏனோ இந்த இதழ்கள் இதனைக்கூட, உணர மறுக்கின்றன. விளக்க மளிக்கும், வாதத்தன்மை மிக்க ஆயிரம் தலையங்கங் கள் தீட்டி டில்லியின் போக்கை மாற்ற முயற்சித் தாலும் அடைய முடியாத வெற்றியை, இந்த இதழ்கள், தீக்குளித்த சின்னசாமியின் படத்தைத் தமது இதழ் களில் வெளியிட்டு, அந்தச்சம்பவம் காட்டும் பாடத்தை பண்டிதநேரு உணரும்படிச் செய்திருந்தால், மொழிப் பிரச்சினையிலே மகத்தான வெற்றி ஏற்பட்டிருக்குமே, கழகத்தின் மீதுஉள்ள கசப்பினுல்—காரணமற்ற கசப் பினுல்—இதழ்கள், பெறவேண்டிய வெற்றியையுமல் லவா இழந்துவிட்டன—நாட்டுக்கே பெரிய நட்டமல்லவா இது; என்று பேசிக்கொண்டோம்.

இதிலிருந்து, எங்கள் பேச்சு, பொதுவாக இந்தி எதிர்ப்புப் பிரச்சினை பற்றித் தொடர்ந்தது. தமிழகத் திலே, ஆச்சாரியார் அமைச்சர்அவையின்போது, நடைபெற்ற இந்தி எதிர்ப்பின்போது, தமிழ்ப் புலவர்கள் பலரும் சீரிய பங்கெடுத்துக் கொண்டனர், இம்முறை அந்த அளவுக்கு இல்லையே. ஏன்? என்பதுபற்றி யோசித்தோம், அப்போது, உண்மைக்காகப் பரிந்து பேசுபவருக்கு, உத்யோகம் போய்விடாது என்ற நிலைமை இருந்தது, இப்போது 'வணக்கம்' என்று கூறிடும் தமிழ் ஆசிரியர்களுக்கே, வந்தது ஆபத்து என்ற நிலை இருக்கிறதே, அதனுல்தான், அவர்கள், மனம் எவ்வளவு துடித்தாலும், இந்தி எதிர்ப்பிலே ஈடுபட முடியாது இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டிவிட்டு, இந்த நிலையிலும், ஔவை. துரைசாமி போன்ற அருந்தமிழ்ப் புலவர்கள், தீக்குளித்த சின்ன சாமி குறித்து எழுச்சியுடன் பாடல் புனைந்து, வெளி யிட்டுள்ளனர், அந்தப் பாடல்களைப் பன்முறையும் படிக்கலாம், படிக்கப் படிக்க, பட்ட மரம் துளிர்ப்பது போல, மொழிப் பற்று அற்ற நிலை பெற்றவர்கட்கும் மொழி ஆர்வம் ஏற்படும் என்று சொன்னேன்.

மாலையில், கழக உறுப்பினர்கள் சேர்ப்பது, அமைப்புகளில் புது முறுக்கு ஏற்படுத்த வழி காண்பது மாநாடுகள் நடத்துவது ஆகியவை பற்றி பேசிக் கொண்டிருந்தோம். கழகம் வளர்ந்துள்ள நிலையில், மாவட்டம் முழுவதும் ஒருவர் செயலாளராகப் பணி யாற்றுவது, அனேகமாக இயலாததாகிவிடுகிறது, இனி வட்டச் செயலாளர்கள் அதிக பொறுப்புகள் அளிக்கப் பட்டு, பணியாற்ற, நமது கழக விதி முறைகளில் வழி செய்யவேண்டும் போலத் தோன்றுகிறது என்று நான் கூறி, இதுபற்றி நன்ருக யோசித்து, நல்ல கருத்து களைத் தாருங்கள் என்று நண்பர்களைக் கேட்டுக் கொண்டேன். கிளைக் கழகங்களுக்கும் துணை மன்றங் களுக்கும் உள்ள தொடர்புகள், சில இடங்களில் அந்தத் தொடர்பு பலனைத் தரும் முறையில் இருப்பது, சில இடங்களில் வெறும் போட்டிக்குக் களமாக இருப் பது, ஆகியவை பற்றிப் பேசினோம். இரண்டு நிலைக ளுக்கும் எடுத்துக் காட்டுகள் உள்ளன என்பது; பேசும்போது நன்ருகப் புரிந்தது.

இன்று மாலை, பரிமளம் என்னைக் காணவரக்கூடும் என்று எதிர்பார்த்தபடி இருந்தேன். வரவில்லை.

வெங்காவைக் காண அவர்கள் வீட்டிலிருந்து வந்திருந்தார்கள். பரிமளம் வராமற் போனது பற்றிய வருத்தம், வெங்கா, தன் வீட்டாரைக் காணச் சென்ற போது, அதிகமாயிற்று. ஒரு கணம். பிறகு நானே வெட்கப்பட்டுக்கொண்டேன். என்னைவிட எவ்வளவோ இளமைப் பருவத்தில் உள்ளவர் வெங்கா. அவருக்கு ஆவல் எழுவதைவிட, எனக்கு எழுவது கூடாதல்லவா! ஆகவே, சரி, இன்று இல்லாவிட்டாலும், நாளை, பரிமளம் வரக்கூடும் என்று எனக்கு நானே கூறிக்கொண்டேன்.

நாளையத்தினமிருந்து, நாங்கள் இங்கேயே சமைத் துக்கொள்வது என்று ஏற்பாடாகி இருக்கிறது. அதற் கான பாத்திரங்கள் தரப்பட்டுள்ளன.

நாளைக் காலையில், 'பைல்'—அதாவது கைதிகளை; அதிகாரிகள் வரிசையாக நிற்கவைத்துப் பார்வையிடும் நாள். ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் இந்தத் 'திருநாள்'.

நான் இருக்கும் இடத்தில் இருந்தபடியே, இன்று, உறவினரைக் காணச் சென்ற, அரக்கோணம் சட்ட மன்ற உறுப்பினர் ராமசாமியைக் கண்டேன். சிரித்த முகத்துடன்தான் காணப்பட்டார்—ஆனுல் மனதுக்குள் என்னை நிச்சயமாகத் திட்டிக்கொண்டிருந்திருப்பார்!

மெத்தவும் ஒதுங்கிப்போகும் ஆசாமி! இந்தத் தேர்தலிலேயே, நான் வலுக்கட்டாயப்படுத்தி, அவரை நிற்கச்செய்தேன்; நமக்கு எதற்கு, நமக்கு வேண்டாம், என்று ஒதுங்கிவிடுபவரை, தேர்தல் களத்திலே இறக்கி விட நான் வெகுபாடுபட்டவன். அத்தகைய ஆசாமி, சிறையில்! அவரோ, அவருடைய குடும்பத்தினரோ,

கனவிலேகூட இப்படி ஒரு நிலை ஏற்படும் என்று நினைத்தே இருக்கமாட்டார்கள். அவருடைய மைத்துனர், ஏ! அப்பா! பெரிய காங்கிரஸ்காரர்!! அமைச்சர் பக்தவத்சலத்தின் பல வலது கரங்களில் ஒருவர். ராமசாமி சிறை புகும் அளவுக்கு நான் அவரைக் கெடுத்துவிட்டேன் என்றுதான், அவர்களெல்லாம் எண்ணிக்கொள்வார்கள், ஆனால் உண்மையைச் சொல்லுகிறேன், சிறைக்குச் செல்லும்படி நான் ராமசாமியிடம் கூறினதே இல்லை. மொழி ஆர்வத்தால் எழுந்துள்ள சூழ்நிலை வேகம், அவரை, இங்குக்கொண்டு வந்து தள்ளிவிட்டது—அவ்வளவே.

மாநகராட்சி மன்றத் தேர்தலில் வெற்றிபெற்ற லோகநாதன், இங்கு இருக்கிறார், அல்லவா. அவரை இன்று காணும் வாய்ப்பு கிடைத்தது. அதிகாரியிடம், அதற்கான அனுமதியை அவர் எப்படியோ பெற்றிருக்கிறார். அவரைக் காண, இன்று என்னை, வேறோர் பகுதிக்கு அழைத்துச் சென்றார்கள். 'சி' வகுப்பு உடையில் லோகநாதன் இருந்தார்—நானும் கைதி உடையில் தான்—அவர் அரைக் கை, அரைக் கால்—எனக்கு முழுக் கை; முழுக் கால் சட்டை! என்னைக் கண்டதும் உணர்ச்சி வயப்பட்டு, காலைத் தொட்டு வணக்கம் செய்தார்—என் மனம் மெத்தவும் உருகிவிட்டது. சில விநாடிகள் பேசிக்கொண்டிருந்தோம். 'கார்ப்பரேஷன் கவுன்சிலர்' ஆகிவிட்டதால், ஒரு சமயம், இன்னும் ஒரு வாரத்தில், 'பி' வகுப்பு தரப்படக்கூடும் என்று நான் சொன்னேன்—"பரவாயில்லை அண்ணா! இன்னும் சில மாதங்கள்தானே—'சீ' 'சி' வகுப்பிலேயே இருந்துவிடுகிறேன்" என்று லோகநாதன் சொன்னபோது, எத்துணை எழுச்சியும் கடமையுணர்ச்சியும் கொண்ட பண்பாளர்கள்; இந்தக் கழகத்திலே இருக்கிறார்கள் என்பதுபற்றி எண்ணிப் பெருமிதமடைந்தேன். அந்த மகிழ்ச்சியுடன், இன்று துயிலச் செல்கிறேன்—காலையிலே எழுந்து ஒழுங்காக கைதி உடை உடுத்திக் கொண்டு, அடக்கமாக, வரிசையில் நிற்கவேண்டுமே—கைதி என்பதற்கான 'பில்லை'யுடன்.

3—3—64

இன்று 'கைதிகளை' சிறை அதிகாரிகள் பார்வையிடும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதற்கு முன்பு நான் சிறைப்பட்டிருந்தபோது, இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வதிலிருந்து எனக்கு விலக்கு அளிக்கப்பட்டிருந்த நினைவு வந்தது. இம்முறைதான், சிறையில் புதிய நிர்ப்பந்தங்களாயிற்றே—ஆகவே, நானும் மற்றக் கைதிகளுடன் வரிசையில் நின்றேன். சிறை அதிகாரிகள் நடத்தும் இந்தப் பார்வையிடும் நிகழ்ச்சி, ஓரளவு 'ராணுவ' முறைபோலவே அமைந்திருக்கிறது. கைதிகளின் உடைகள், அவர்கள் பயன்படுத்தும் தட்டுகள் குவளைகள் இவைகள் ஒழுங்காக்கப்பட்டு, கைதிகளும் 'சுத்தமாக' இருக்கும் நிலை ஏற்படுகிறது. மிக முக்கியமாக, கைதிகள் தங்களுக்குத் தரப்பட்டுள்ள எண் குறிக்கப்பட்டுள்ள பில்லைகளை பளபளப்பாக்கிக் கொள்கிறார்கள். எனக்குத் தரப்பட்டுள்ள 'பில்லை'யின்படி நான் கைதி எண் 6342! சுந்தரம் 6343 பொன்னுவேல் 6344 வெங்கா 6345 பார்த்தசாரதி 6346—ஜவரல்லவா, அறப்போரின் முதல் அணி. இன்று சுந்தரம் 'முகக்ஷவரம்' செய்துகொள்ளாதிருந்தது கண்டு சிறை மேலதிகாரி, வேடிக்கையாக, "என்ன திருப்பதி போகப் போகிறீரா?" என்று கேட்டுவிட்டுச் சென்றார்.

வழக்கமான நிகழ்ச்சிகள் பிறகு தொடங்கின.

அன்பழகன், முன்னாள் இரவு திருக்குறள் ஆராய்ச்சி நடத்தியதில் சில பற்றி எடுத்துரைத்தார். பலர் திருக்குறளுக்கு உரை எழுதி இருக்கிறார்கள் என்றாலும், நுண்ணறிவுடன் மேலும் பல உரைகள் எழுதுவதற்கான வாய்ப்பும் தேவையும் இருக்கிறது என்பது, அன்பழகன் பேசும்போது தெரிகிறது. பொதுவான 'உரை'யில், ஒருவர் எழுதுவதற்கும் மற்றவர் எழுதுவதற்கும் அதிகமான அளவு மாறுபாடு இல்லை—இருக்க முடியாது—என்றாலும், சில இடங்களில், சிறப்புரையும் புதுமைஉரையும் பெற வழி இருக்கிறது. ஏனோதானோ வென்றோ எடுத்தேன் கவிழ்த்தேன் என்றோ, வலிந்து பொருளையும் கருத்தையும் திணித்தோ உரை எழுதக்கூடாது. புதுமைக் கருத்து கூறுவதாயினும் பொருத்தம் பார்த்து, கற்றோர் ஏற்றுக்கொள்ளத் தக்கதுதான் என்று கூறத்தக்க முறையில் அமைய வேண்டும் என்பதிலே அன்பழகன் மிகுந்த அக்கறை காட்டுகிறார்.

குறளில் வரும் 'தென்புலத்தார்' எனும் கருத்து குறித்துப் பேசத் தொடங்கிய நாங்கள், தமிழர்கள் பிற நெறியை எப்போது, ஏன், எவ்வகையில் கொண்டனர் என்பதுபற்றி ஆராயலானோம். தமிழக வரலாற்றுத் துணுக்குகள் பற்றிய பேச்சு சுவை அளிப்பனவாக இருந்தன.

நான் நான்கு நாட்களாக, படித்துக்கொண்டிருக்கும் சட்டம் பற்றிய வரலாற்று ஏடு பற்றிக் குறிப்பிட்டு, மனு தர்ம சாஸ்திரம் சட்ட திட்டங்களைக் குறிப்பிடுவது பற்றியும், அதிலே உள்ளவைகள், சாதி ஆதிக்கத்துக்குத் துணை செய்வதாக இருந்தபோதிலும், சட்டம் அந்த நாட்களில் எந்த முறையில் இருந்தது என்பதை அறிய வாய்ப்பளிக்கிறது என்பதையும் எடுத்துக் கூறி, தமிழகத்தில், சட்ட திட்டம் இவ்வாறு இவ்வாறு இருந்தது என்பது தெரியத்தக்க விதத்தில் ஒரு தனிநூல் இல்லையே என்று கூறினேன். சங்க காலத்தில், நீதி, சட்டம், இவை எங்கனம் இருந்தன என்பதுபற்றி, சட்டக் கல்லூரிப் பேராசிரியர் பழனிச்சாமி எனும் நண்பர் ஆராய்ந்துகொண்டிருப்பதாக மதியழகன் சொன்னார். மிகத்தேவையான ஆராய்ச்சி. பழனிச்சாமி அதற்கான நூல் வெளியிட்டால், மிக்க பயன் அளிப்பதாக அமையும் என்பதில் ஐயமில்லை.

மனுநீதி கண்ட சோழன், மனு தர்ம சாஸ்திரத்தை மேற்கொண்டு நடந்தானென்று தெரிகிறதே, அப்படியாயின் மனு தர்மத்தைத் தமிழ் அரசு ஏற்றுக்கொண்டு விட்டதாகத்தானே பொருள்படுகிறது என்று மதியழகன் கேட்டார். அன்பழகன் உள்ளபடி ஆராய்ந்து பார்த்தால், அந்தச் சோழன், மனு தர்மத்தின்படி நடக்கவில்லை என்பது தெரியும். கன்று, தேர்க்காலில் சிக்கி இறந்ததற்கு, மனு போன்றோர் கூறிடும் 'தர்மம்', பொன்னாலே கன்று செய்வித்து, அதனைப் 'பிராமணர்களுக்கு' தானமாகத் தருவதுதான்; ஆனால் மன்னன் அதைச் செய்யவில்லை; மகனையே தேர்க்காலின் கீழ் இருந்து இறந்திடச் செய்தான் என்றார். மனுநீதி கண்ட சோழன் என்று கூறுவதைவிட மனுநீதி கொன்ற சோழன் என்பதே பொருந்தும் என்றார். எனக்கு இது சாமர்த்தியமான சமாதானமாகப் பட்டதேயன்றி, சரியான விளக்கமாகப்படவில்லை. நான் சொன்னேன் நமது முன்னோர்கள், பழந் தமிழர்கள், பிறநெறியாளரின் முறைகளை, ஆரிய சட்ட திட்டங்களை ஏற்றுக்கொண்டதே இல்லை, ஆகவே அவை நமக்கு இப்போதும் வேண்டாம் என்று வாதாடி, எவரேனும் ஒருவர், ஏதேனும் ஓர் ஏட்டிலே ஒரு இடத்தை விளக்கிக் காட்டி, நீங்கள் கண்டிக்கும் முறைகளைத் தமிழர்கள் முன்பு கொண்டிருந்தனர் காணீர் என்று இடித்துரைத்து, நாம் அதற்கு ஒரு சமாதானம் தேடிக்கொண்டு இருப்பதைவிட, தேவையற்ற, பொருளற்ற பொருத்தமற்ற, நெறி, முறை, சட்டதிட்டம் முன்பே தமிழ் சமுதாயத்தில் இருந்திருந்தாலும், அவை நமக்கு வேண்டுவதில்லை என்று கூறுவதுதான், வீணான சிக்கலுக்குள் நம்மைச் சிக்க வைத்துக் கொள்ளாத முறை நாம் மிக முக்கியமாகக் கவனிக்கவேண்டியது, சில முறைகள் முன்பே இருந்தனவா இடையிலே நுழைந்தனவா என்பது பற்றி அல்ல அவை தேவையா வேண்டாமா என்பதுதான் என்று கூறினேன்.

பிறகு வழக்கம்போல், இதழ்கள் தரப்பட்டன; அவைகளைப் படித்து, செய்திகள் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம்.

சின்னச்சாமியின் தியாகம்பற்றி, நமது கழகத் தோழர் ராமசாமி சட்டசபையில் பேசியிருந்ததைப் படித்தபோது, கண்களில் நீர் துளிர்த்தது, மற்றோர் இளைஞன் இதுபோலச் செய்யப்போவதாக அறிவித்திருந்ததாகச் செய்தி கண்டேன்; திடுக்கிட்டுப் போனேன். இருந்து, அநீதியை எதிர்த்துப் போராட வேண்டும்; இறந்துபடுதல், தேவையற்ற முறை; அத்தகைய எண்ணம் ஏற்படவிடக்கூடாது என்று இங்கு நண்பர்களிடம் கூறினேன்.

வேறோர் இளைஞன். சட்ட மன்ற நுழைவு வாயிலில் நின்றுகொண்டு, என்னை விடுதலை செய்யவேண்டும் என முழக்கமிட்டதாகவும், அதற்காகக் கைது செய்யப்பட்டதாகவும் பத்திரிகையில் கண்டேன். இதுவும் தேவையற்ற செயல். நானும் நண்பர்களும், சிறையில் அடைபட்டுக் கிடப்பதன் மூலம், தமிழர்களின் சிந்தனையைக் கிளறி, மொழி ஆதிக்க எதிர்ப்புணர்ச்சியை எழச் செய்யலாம் என்று நம்பி, கம்பிகளுக்குப் பின்னால் கிடக்கிறோம். மொழி ஆதிக்கத்தின் கேடுகளை மற்றவர்கள் உணரும்படியாகப் பிரச்சாரம் செய்யப்பட வேண்டுவது முறையேயன்றி, எங்களை 'விடுதலை' செய்யச் சொல்லி முழக்கமிடுவதும், கிளர்ச்சிசெய்வதும் முறையுமல்ல, தேவையுமில்லை

தூத்துக்குடியில் அரசில் சட்டத்தைக் கொளுத்திய இளமுருகுபொற்செல்வி குழுவினரின் வழக்கு, மிகத் துரிதமாக முடிவுற்றது, மகிழ்ச்சிகரமான செய்தி. ஆறுமாதக் கடுங்காவல் விதிக்கப்பட்டிருக்கிறது. இளமுருகு, ஆசிரியராக பணியாற்றியவர்; பொதுத் தொண்டில் நீண்டகாலமாக உள்ளவர், அவருக்கு 'சி' வகுப்புதான் என்று விதித்திருப்பது, நாம் காங்கிரசாட்சியில் இருக்கிறோம் என்பதைத்தான் நினைவுபடுத்துகிறது.

இன்று பிற்பகல், நாங்கள் இங்கேயே சமைத்துக் கொள்வதற்கான ஏற்பாட்டின்படி, சமையலுக்குத் தேவையான பண்டங்கள் எவ்வளவு அளிக்கப்படும் என்பதற்கான 'பட்டியல்' பார்த்தசாரதியிடம் தரப்பட்டது. பட்டியலைக் காண்பதற்காகத் தந்திருக்கிறேன். எங்கள் எழுவருக்கு இரண்டு வேளை சாப்பாட்டிற்கும் காலை சிற்றுண்டிக்கும் சேர்த்து,

		கிலோ கிராம்
அரிசி		1—610
கோதுமை		0—805
பருப்பு		1—190
புளி		0—210
மிளகாய்த்தூள்		0—140
உப்பு		0—280
வெங்காயம்		0—210
காய்கறி		1—610
உருளைக்கிழங்கு		0—420
கடுகு		0—070
மிளகு		0—070
நல்லெண்ணெய்		0—210
சர்க்கரை		0—210
காபிதூள்		0—105
பால்	லிட்.	2—94
நிலக்கடலை		0—420
நெய்		0—210
விறகு		6—370

இன்று மாலை சிறை மேலதிகாரி எங்களிடம் பேசிக்கொண்டிருந்தார். நாளையத்தினம், சட்டமன்ற உறுப்பினர் ராமசாமியை, எங்களோடு கொண்டுவந்து சேர்த்துவிடப்போவதாகத் தெரிவித்தார். நமது கழகத் தோழர்களின் எண்ணிக்கை, செங்கற்பட்டு மாவட்ட

அறப்போர் வீரர்களின் வருகையால் வளருகிறது. இப்போது நாங்கள் இருக்கும் 'பகுதி' இனிப் போதாது என்று தெரிகிறது. இன்னும் சில நாட்களில் வேறு பகுதிக்கு மாற்றுவதாக மேலதிகாரி தெரிவித்தார்.

இன்று மாலையும் பரிமளம் வரவில்லை; எதிர்பார்த்திருந்து ஏமாற்றமடைந்தேன்.

சட்டப் புத்தகம் படித்துக் குறிப்பெடுத்தேன்—'வரவு-செலவு' என்ற சிறுகதை ஒன்றும் எழுதினேன்.

நிரம்பப் புத்தகங்கள் தேவைப்படுகின்றன; கிடைக்கும் வழிதான் தெரியவில்லை.

வெளியிலேயே, நான் இரவு நீண்ட நேரம் தூக்கம் பிடிக்காமல், விழித்திருப்பது வாடிக்கை. சிறையில் சொல்ல வேண்டுமா! இரவு இரண்டு மணிவரையில் படித்துக்கொண்டிருக்க ஏடு தேவை! கிடைப்பதில்லை; கிடைக்கும் ஏடுகளை, பண்டங்களைச் சிறுகச்சிறுக உபயோகப்படுத்துவதுபோல, ஒரே அடியாகப் படித்து முடித்துவிடாமல், விட்டுவிட்டுத்தான் படித்துக்கொண்டிருக்கிறேன். சிறையில்—குறிப்பாக நான் இருக்கும் பகுதியில், எல்லோரும் உறங்கிக்கொண்டிருக்கிருர்கள் —நானே, துயிலலாம் என்று படுக்கையில் படுத்தாலும், தூக்கம் பிடிக்காமல், புரண்டபடி இருக்கிறேன். விளக்கு எப்போதும் எரிந்தபடி இருப்பதால், பக்கத்திலேயே புத்தகமும் மூக்குக்கண்ணுடியும் வைத்துக் கொண்டிருக்கிறேன்; தூக்கம்வர மறுக்கிறது என்றால், படித்திட. படிக்காமல், படுத்திருக்கும் நேரத்திலெல்லாம் வெளியே உள்ள நமது தோழர்களைப்பற்றி எண்ணியபடி இருக்கிறேன்.

4—3—64

சட்டசபை உறுப்பினர் ராமசாமி இங்கு கொண்டு வரப்பட்டதால், இன்று என் அறையில் தோழர்கள் பொன்னுவேல், வெங்கா இருவரும் தங்கியுள்ளனர். இருவருமே, அதிகமாகப் பேசும் பழக்கம் உள்ளவர்கள் அல்ல. வேலூர் சிறையில் பொன்னுவேல் என்னுடன் ஒரே அறையில் இருந்திருக்கிருர் நாங்கள் வேலூரில் இருந்தபோது, பிரிவினைக் கொள்கையை ஒடுக்க, சர்க்கார் மேற்கொள்ளப்போகும் திட்டம்பற்றிய செய்திகள் இதழ்களில் வந்திருந்தன. பல இரவுகள் அதுகுறித்து நான் பேசிவந்தேன். மாணவர்கள், கொள்கைத் துடிப்புள்ள இளைஞர்கள் ஆகியோருடைய நோக்கம், கருத்து குறித்து பொன்னுவேல் மெத்த ஆர்வத்துடன் பேசுவார். பல இரவுகள் இந்தப்பிரச்சினைபற்றி வேலூர் சிறையில் பேசிப்பேசி, தெளிவும் நடைமுறைக்கு ஏற்றவை எவை என்பதுபற்றிய வேலைத்திட்ட விளக்கமும் கிடைக்கப்பெற்றோம். பொன்னுவேல்—வெங்கா போன்றவர்கள் இளைஞர்கள்—மணவாழ்க்கையின் பொலிவுகளையும் பொறுப்புகளையும் மேற்கொள்வதிலே ஆர்வம்கொள்ளவேண்டிய வயதினர். ஆனால் மொழிப்பற்றும், ஆதிக்க எதிர்ப்புணர்ச்சியும் அத்தகையவர்களைச் சிறைபுகச் செய்திருக்கிறது. நல்ல ஆர்வத்துடன் தூய்மையான எண்ணத்துடனும், அழுத்தமான நம்பிக்கையுடனும், இந்தத் தொண்டில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டுள்ளனர்.

அரக்கோணம் ராமசாமி, சிறைக்குப் புதியவர்—சிறையிலே காணப்படும் முறைகளையும் நிலைமைகளையும் பார்த்துத் திடுக்கிட்டுப் போயிருக்கிருர். முதலிலே பயமாக இருந்ததா என்று கேட்டதற்கு, சற்று தயக்கத்துடன், "ஆமாம்! முதல்நாள் கொஞ்சம் அச்சமாகத்தான் இருந்தது" என்று கூறினர். நம்மிலே பலர் கருதுவதுபோலவே நண்பர் ராமசாமியும், அரசியல் கைதிகளை; மற்றக் கைதிகப்போல அல்லாமல், தனிவிதமாக நடத்தவேண்டும் என்று எண்ணுகிருர்—அவருக்கு இந்தச் சிறை அனுபவம், பல புதிய கருத்துகளைத் தரும் என்பதில் ஐயமில்லை.

இன்று மாலை, அவருடைய தம்பி வந்திருந்தார்—ராமசாமியைக் கண்டதும் அழுதேவிட்டாராம். இதை ராமசாமி என்னிடம் சொன்னபோது, அவரே ஓரளவு கலங்கித்தான் போயிருந்தார். பொன்னுவேலுவைக் காண அவருடைய தம்பி வந்திருந்தார். பரிமளத்துக்கு இப்போது பரீட்சை நேரமென்றும், அதனுல்தான் என்னைக் காண வரமுடியவில்லை என்றும், எனக்குத் தெரிவிக்கப்பட்டது.

இன்று எங்கள் பகுதியில் நாங்களே சமைத்துக் கொண்டோம். நீண்ட பல நாட்களுக்குப்பிறகு சில்லிட்டுப்போகாத சோறும் சாறும் உண்டு மகிழ்ந்தோம். சமையல் வேலையில் சிறிதுநேரம், பார்த்தசாரதிக்குத் துணையாக இருந்தேன்.

சட்ட வரலாறுபற்றிய புத்தகத்தைப் படித்து முடித்துவிட்டேன். அதன் தொடர்பாகப் படிந்தாக வேண்டிய புத்தகங்களை, தருவித்துக் கொடுக்கும்படி பொன்னுவேலிடம் சொன்னேன். அவர், தன் தம்பியிடம் சொல்லி அனுப்பி இருக்கிருர்.

விற்பனையாளர்களுக்கு

மணியார்டர், செக், டிராப்ட், கடிதங்கள் அனுப்பும்போது உரிமையாளர் "காஞ்சி" அலுவலகம் சின்ன காஞ்சிபுரம் என்று குறிப்பிட்டு எழுதவும்.

Proprietor:
"KANCHI"
L. Kanoheepuram.

நான் படித்து முடித்த புத்தகம், ஒருமுறை படித்தால் போதும் என்ற முறையில் உள்ளதல்ல. மறுமுறையும் படிக்க எண்ணிக்கொண்டிருக்கிறேன்.

'அடக்குமுறை'பற்றிய புத்தகம், காணமற் போய்விட்டதாக, சிறை அதிகாரிகள் சொல்லி இருந்தார்களல்லவா! திடீரென்று, இன்று மாலை, அந்தப் புத்தகத்தை அவர்களே கொடுத்தனுப்பினார்கள். ஏதாவது ஒரு புத்தகம், எங்களிடம் கொடுக்கப்படக்கூடியதா அல்லவா என்ற ஐயம் இங்குள்ள அதிகாரிகளுக்கு ஏற்பட்டுவிட்டால், அவர்கள் அந்தப் புத்தகத்தை, சர்க்காருக்கு அனுப்பி, அவர்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்டறிந்து அதன்படி நடக்கிறார்களாம். இப்படி ஒரு விளக்கம்—அதிகாரிகளால் அல்ல—எனக்கு அளிக்கப்பட்டது. சிறை அதிகாரிகளுக்கு, ஏடுகளைப்படிக்க நேரமும் கிடைக்காது, நினைப்பும் எழாது—மற்ற எந்த ஏடுகளாக இருப்பினும், உடனே கொடுத்துவிடலாம். புத்தகங்கள் தருவதிலே இத்தனை கண்டிப்பும், தடைகளும் இருக்கத் தேவையில்லை—அதிலே பொருளும் இல்லை.

சிறையிலே, புத்தகங்கள் தருவதிலே இவ்விதமான முறையும் தடையும் இருக்கிறது, ஆனால் இன்று பத்திரிகையில் ஒரு செய்தி பார்த்தேன்—அறிவுக்குத் தடைவிதிக்கும் அக்ரமத்தை எவரெவரெல்லாம் கண்டிக்கிறார்கள் என்பதற்கான சான்று, அந்தச் செய்திமூலம் கிடைத்தது.

வழுக்கி விழுந்தவளைப்பற்றிய ஏடொன்று, ஆபாசமானதாக இருக்கிறது என்று அமெரிக்க நீதிமன்றம் கூறிவிட்டது.

ஆனால், இப்படி ஒரு ஏடு, ஆபாசமானது என்று கருதி தடை விதிப்பது முறையாகாது என்ற கருத்து கொண்ட கிருத்தவ தேவாலய அதிபர் ஒருவர், அந்த ஏட்டினைத் தமது தேவாலயம் வருபவர்களுக்குத் தந்து படிக்கச் சொல்லப்போவதாகவும், அதிலே உள்ளது போன்ற கருத்தோவியங்கள் பல பைபிள் புத்தகத்திலேயே இருப்பதுபற்றிப் பேசப்போவதாகவும் தெரிவித்திருக்கிறார். இங்குச் சிறையிலோ தடை செய்யப்பட்ட புத்தகங்கள் அல்ல, வரலாறுகூட அய்யப்படத்தக்க புத்தகமாகத் தெரிகிறது. அவர்கள் மீது குற்றம் இல்லை — அவர்களுக்கு இவ்விதமான 'கண்டிப்புடன்' நடந்துகொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிற சர்க்காரின் போக்கிலேதான் குற்றமிருக்கிறது. பண்டித ஜவஹர்லால் நேரு சிறையிலிருந்தபோது–அகமத்நகர் கோட்டைச் சிறையில் — இலண்டனில் உள்ள அவருடைய நண்பர்கள் பல புத்தகங்களைக் கொடுத்தனுப்பினார்களாம்—அந்த ஏடுகள் சிறையில் நேருவிடம் தரப்பட்டன. இலண்டனிலிருந்து அந்தப் புத்தகங்களைப் பெற்றுக்கொண்டு வந்து. சிறையில் இருந்த நேருவிடம் அனுப்பிவைத்தவர் யார் என்றால், வைசிராய் வேலை பார்க்கவந்த வேவல் பிரபு. வெள்ளைக்காரனுக்கு அந்தத் தாராளத்தன்மை இருந்தது என்பதை, துரைத்தனத்தில் பெரிய பதவிவகித்திருந்த எச். ஆர். வி. அய்யங்கார் என்பவர் இந்த வாரம் ஒரு கட்டுரையில் விளக்கி இருந்தார். அதனையும் சிறையிலே படித்தேன், சிறையில் புத்தகங்கள் தருவதிலே மேற்கொள்ளப்படும் 'கெடுபிடி'யையும் காண்கிறேன். சுயராஜ்ய சர்க்காரிடம் பரிவா ஏற்பட முடியும்!!

இன்று பிற்பகல், "அவை அறிதல்" பற்றியுள்ள குறள் பற்றி அன்பழகன், தனக்குத் தோன்றிய சில கருத்துகள் குறித்து என்னிடம் பேசிக்கொண்டிருந்தார்.

இன்று மாலை வழக்கம்போல் எங்கள்பகுதி நுழைவு வாயிலருகே, உட்கார்ந்துகொண்டிருந்தேன்; மூன்று புருக்கள் ஒயிலாக உலவிக்கொண்டிருக்கக் கண்டேன். புருக்களை வளர்ப்பதிலும் அவைகளுடன் விளையாடிக் கொண்டிருப்பதிலும் எனக்கு மிகுந்த விருப்பம் என்பது பலருக்குத் தெரியும். நீண்ட நாட்களுக்குப் பிறகு, புருக்களைக் கண்டபோது, ஓடிச் சென்று அவைகளைப் பிடித்துவைத்துக்கொண்டு விளையாடலாமா என்று கூடத் தோன்றிற்று. சிறை அதிகாரிகளிலே ஒருவருடைய புருக்கள் அவை என்று கூறினார்கள். எங்களிடம் சிறை அதிகாரிகள் நடந்துகொள்ளும் முறையும் அதற்கான காரணமும்தான் எனக்குத் தெரிந்திருக்கிறதே; இங்கிலையில் புருக்களைக் கேட்டால் கொடுக்கவா சம்மதிப்பார்கள். கொடுத்தால், எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும். நான் வெளியே வளர்க்கும் புருக்கள் என்னிடம் மிகஅன்பு காட்டும்; என் கரத்திலும் தோட்களிலும் தொத்திகொண்டு, தீனி தின்பதிலே அவைகளுக்கு மிகுந்த விருப்பம். இங்கு, புருக்கள் வளர்த்திட அனுமதி கிடைத்தால், மிக மகிழ்ச்சி அடைவேன். நாங்கள் இருக்கும் பகுதியில், பூனைகளும் அதிகமாக இல்லை; ஒரே ஒரு பூனைதான் உலவிக்கொண்டிருக்கிறது, அழகான பூனை, சாமான்கள் கிடங்கிலே இருக்கும் பூனை, மிகச் செல்லமாக வளர்க்கப்படுகிறது. ஆகவே அது வேட்டையாடும் போக்கைக்கூட மறந்துவிட்டது. காலையும் மாலையும், அசைந்து அசைந்து நடந்து வரும், புல்வெளிப்பக்கம் சில விநாடிகள் உலவிவிட்டு, பொறுப்புள்ள அதிகாரி தமது அலுவலைக் கவனிக்கச் செல்வதுபோல கிடங்குக்குச் சென்றுவிடும். ஆகவே புருக்களுக்குப் பூனையால் ஏற்படக்கூடிய ஆபத்துகூட இருக்காது; ஒரே ஒரு ஆபத்து—பெரிய ஆபத்து—இருக்கிறது; இங்குதான் பொன்னுவேல் இருக்கிறார், நான் சிறிது ஏமாந்திருந்தால் புரு, ஏப்பமாக மாறிவிடக்கூடும். அந்த ஒரு பயம்தான். வீணான எண்ணங்கள்!! சிறை அதிகாரிகளாவது எங்களுக்கு மன நிம்மதிக்கான உதவிகளைச் செய்வதாவது.

அண்ணன்,

அண்ணாதுரை

285

15-11-74

அந்திக்கலம்பகம்

"தெரியுமோ விஷயம். அர்ஜுனன் சுட்டுக்கொல்லப்பட்டதுபற்றி பகிரங்க நீதி விசாரணை நடத்தியாக வேண்டும் என்று, கோயமுத்தூர் பார்கவுன்சில் — தீர்மானம் போட்டிருக்குது..."

"சர்க்கார் ஒத்துக்கொண்டதோ அந்த யோசனையை..."

"ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை."

"சரிதான்.....வக்கீல்கள்கூடிச் சொல்வதையும் இந்த சர்க்கார் குப்பைக் கூடையிலேதான் போடுகிறா யாருக்குத்தான் மதிப்பு அளிப்பார்களோ தெரியவில்லை......அரசியல் கட்சிகள் பேச்சைத்தான் தள்ளிவிடுகிறா, வக்கீல்கள் படித்தவா, சட்டம் தெரிந்தவா....அவர்களோட பேச்சை மதிக்கக்கூடாதோ..."

"ஏமு! வக்கீல்கள் பேச்சை என்ன, ஜட்ஜிகள் பேச்சைக்கூட மதித்தாகணுமா என்ன என்று கேட்கற அளவுக்குக் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் போய்க்கொண்டிருக்கிறார்கள்..."

"பொன்னி! ஜட்ஜுகள் பேரிலேயே பொதுவாக, பல காங்கிரஸ் தலைவர்களுக்குக் கோபம்..."

"எதனாலே கோபம்! ஜட்ஜுகள் என்ன, காங்கிரசோடு போட்டியிட்டுத் தொல்லை தருகிறார்களா— ஆபத்து ஏற்படுதா—எதனாலே அவர்களிடம் கோபம்..."

"பல வழக்குகளிலே, சர்க்கார் சட்டங்களையும் ஏற்பாடுகளையும் ஜட்ஜுகள் தள்ளிவிட்டுத் தீர்ப்பு தந்திருக்கிறது ஒரு காரணம்..."

"எது நியாயமோ அதைத்தானே ஜட்ஜிகள் செய்யவேண்டும். அவர்களுக்கு எல்லாரும் ஒன்றுதானே. காங்கிரஸ்காரருக்கு ஒரு நீதி மற்றவர்களுக்கு ஒருநீதி என்று இருக்கலாமா..."

"கூடாது. ஆனால் காங்கிரசிலே பலருக்கு என்ன எண்ணம் தெரியுமா—இந்த ஜட்ஜுகளிடம் உள்ள அதிகாரம் அதிகம், அதை மட்டந்தட்ட வேண்டும் என்பதுதான்..."

"எங்களவர் சொல்வார் பட்டு! நம்ம நாட்டு ஜட்ஜுகள்தான், சர்க்கார் அத்துமீறிப் போனால், தடுத்து நிறுத்தக்கூடியவர்கள் என்று. அந்த நிலையும் போய்விட்டா, ஆளுகிற கட்சிக்காரர்கள் என்ன அக்ரமம் செய்தாலும், கேட்க யார் நாதி"

"வந்த வம்பே எதனாலே தெரியுமோ. உத்திரபிரதேச சட்டசபையிலே, ஒரு எதிர்க்கட்சிக்காரர் அத்துமீறி நடந்ததாக சபாநாயகர் தீர்மானித்து அவரைக் கைது செய்யும்படி உத்திரவு போட்டார்..."

"யாரை? பல ஆயிரம் மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்டவரையா?"

"ஆமாம்! ஆனா அவர் எதிர்க் கட்சி. அதனாலே அவர் பேரிலே எடுக்கப்பட்ட நடவடிக்கையை மெஜாரடி ஆதரிக்குமல்லவா...?"

அப்படியானா அந்த மெஜாரடி கூடிக்கொண்டு எதிர்க்கட்சிக்காரர்களை என்ன வேண்டுமானாலும் செய்துவிடலாமா? அந்த மெஜாரடி செய்தது நியாயமா இல்லையா என்று கூற ஒருவரும் தேவை இல்லையா?"

"தேவைதான். அதனாலேதான் அந்த மெம்பர் கோர்ட்டிலே மனு கொடுத்தார். ஜட்ஜு அந்த மெம்பரைக் கைது செய்யக்கூடாது என்று தடுத்து தீர்ப்பு கொடுத்தார்"

"அதுதானே கேட்டேன். அப்படி ஒரு முறை இல்லாவிட்டா, தேளுக்கு மணியம் கொடுத்தா தேடித் தேடிக் கொட்டுமாம் என்பதுபோல அல்லவா நிலைமை ஆகிவிடும்..."

"நிலைமை என்ன ஆச்சு என்பதை முழுவதும் சொல்லவில்லையே பட்டு..."

"சொல்வதற்குள்ளே ஏமு பேசினா நான் என்ன செய்ய..."

"மனதிலே பட்டதைச் சொன்னேண்டி பட்டு! நீ சொல்லு. பிறகு"

"சட்டசபை கூடி, அந்த ஜட்ஜு, சட்டசபை முன்னேவந்து, பதில் சொல்லவேண்டும் என்று உத்திரவு போட்டுவிட்டது"

"ஜட்ஜுகளை விசாரிக்கிற பெரிய கோர்ட்டா சட்டசபை..."

"கேளேன் மத்ததை. மற்ற ஜட்ஜுகள் ஒன்ருக உட்கார்ந்து, சட்டசபை முன்னே ஜட்ஜு போகவேண்டும் என்ற உத்திரவை நிறுத்தி வைக்க வேண்டும் என்று தீர்ப்பு செய்துவிட்டா...

"விபரீதமா இருக்குதே பொன்னி! சட்டசபையோட அதிகாரம் பெரிதா நீதிமன்றத்தோட அதிகாரம் பெரிதா என்ற விவகாரமாக அல்லவா இது ஆகிவிட்டது..."

"அதேதான். இந்தப் பிரச்சினையைப் பத்தி அபிப்பிராயம் சொல்லச் சொல்லி குடிஅரசுத் தலைவர், சுப்ரீம் கோர்ட்டைக் கேட்டார். சுப்ரீம் கோர்ட், ஜட்ஜு செய்தது சரி என்று சொல்லிவிட்டது."

"நியாயம் நிலைத்ததுன்னு சொல்லு..."

"அப்படிச் சொல்[illegible] இல்லையே. கோபமல்[illegible] ஆ[illegible]கி விட்டிருக்குது சட்டசபைக்காரர்களுக்கு. அதனாலேதான், ஜட்ஜுகளுடைய அதிகாரத்தையே மட்டுப்படுத்த, அரசியல் சட்டத்தையே திருத்தவேண்டும் என்று ஒருமுயற்சி நடந்துகொண்டிருக்குது..."

"எத்தனை தடவைதான் திருத்துவாளோ தெரியல்லே இந்த அரசியல் சட்டத்தை"

"ஆளுகிற கட்சிக்கு எது எது அசௌகரியம்னு தோணுதோ அதை எல்லாம் சரிப்படுத்த அரசியல் சட்டத்தைத் திருத்தியபடிதான் இருக்கிறது ஆளுங் கட்சி..."

"இந்தத் திருத்தம் நியாயமா இல்லையா என்று கூற ஜட்ஜுகளுக்கு அதிகாரம் இருக்குதா, இல்லையா?"

"திருத்தும் அதிகாரம் பார்லிமெண்ட்டுக்கு உண்டு. ஆனல் திருத்தம், அடிப்படை உரிமையை பாதிக்குதா இல்லையா என்பதுபற்றி வழக்கு போட உரிமையும் இருக்குது..."

"பட்டுவுக்குத் தெரிந்திருக்கும். அமெரிக்காவிலே, சுப்ரீம் கோர்ட் கொடுத்திருக்கிற தீர்ப்பு ஒவ்வொன்றும் பிரமாதம். ஒரு வழக்கு ஏமு! அமெரிக்க பள்ளிக்கூடங்களிலே, வகுப்பு ஆரம்பிக்கிறதுக்கு முன்னலே, எல்லா பிள்ளைகளும் தோத்திரப் பாடல் பாடணும்னு இது தேவையில்லை என்று ஒரு ஆட்சேபனை மனு வந்தது."

"சுப்ரீம்கோர்ட்டுக்கா வந்தது..."

"ஆமாம். பள்ளிக்கூடத்து பிள்ளைகளை, பிரார்த்தனை செய்தாகணும் என்று கட்டாயப்படுத்தக்கூடாது, அது அடிப்படை உரிமையை பாதிக்கிறது என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு கொடுத்திருக்குது..."

"பாரேண்டி, அவர்களோட தைரியத்தை...நேர்மையை."

"பொன்னி! இப்ப தேர்தலுக்கு நிற்கிருரே கோல்டுவாடர் அவர், இதை எதிர்த்துப் பேசுகிருர், தெரியுமா."

"ஆமாமாம்! ஜான்சனோட கட்சி, தெய்வ பக்தியை நாசம் செய்துவிட்டது என்று பழி சுமத்திப் பேசுகிருர்."

"இங்கே காங்கிரஸ் கட்சிக்காரர்கள் சொல்கிருர்களே சுழகத்துக்காரர் நாத்தீகர்கள், அவர்களுக்கு ஓட்டுப் போடக்கூடாது என்று, அதுபோலப் போலிருக்கு இது..."

"ஏமு! இப்ப, காங்கிரசாலே அதையும் சொல்ல முடியாது, ஏன் தெரியுமா? நான் ஒரு நாத்தீகன்—பிள்ளையாரைப் போட்டு உடைப்பேன் என்று பகிரங்கமாகச் சொல்பவர் பெரியார். அவர், காங்கிரசுக்கு ஓட்டுப் போடச் சொல்கிருர். அப்படி இருக்க, காங்கிரஸ் நாத்தீகத்தை எப்படி இப்ப கண்டிக்க முடியும்..."

"அப்படி ஒரு தர்மசங்கடமான நிலையா காங்கிரசுக்கு..."

"ஆனா, எந்த தர்மசங்கடமான நிலையையும், பணத்தாலே சரிப்படுத்திக்கொள்கிற சாமர்த்தியமும் சக்தியும் இருக்குதே காங்கிரசுக்கு"

"எத்தனை காலத்துக்குப் பலிக்கும் அந்த சாமர்த்தியமும் சக்தியும் ...உணவு நெருக்கடியிலே சிக்கித் தவிக்கிற மக்கள் காங்கிரசுக்கு ஓட்டுப்போடுவார்களா.....எனக்குச் சந்தேகந்தான்......"

"உனக்குமட்டுமா சந்தேகம் ஏமு! காங்கிரசுக்காக இந்தத் தள்ளாத வயதிலே ஓட்டுகேட்டு வேலைசெய்கிருரே பெரியார்—அவருக்கே அடுத்த தடவை காங்கிரஸ் ஜெயிக்குமா என்பதிலே சந்தேகம் வந்துவிட்டது. அவரே அதுபோலப் பேசி இருக்கிருர் ஒரு கூட்டத்திலே......"

"பொன்னி! நெல்லுக்கு நல்ல விலை கொடுத்தா, தன்னலே மார்க்கட்டுக்கு வந்து குவியும்னு சொன்னர்களே; விலையைக் கூட்டிக் கொடுத்தும் ஏன் போதுமான அளவு நெல் வரவில்லை, மார்க்கட்டுக்கு"

"இன்னும் பணம் கூட்டிக் கொடுக்கட்டுமே என்ற பேராசைதான். சர்க்கார்தானே வளரவிடுது அப்படிப்பட்ட பேராசையை"

"என்னமோ தானிய வியாபாரத்தைச் சர்க்காரே நடத்தப்போகுது என்று பேசினரே உணவுமந்திரி, அது என்ன ஆச்சு..."

"திட்டம் போட்டுக்கொண்டு இருக்கிருர். விரைவிலே ஆரம்பமாகும் என்கிருர்......"

"நல்லா இருக்குது திட்டம் போடுகிற இலட்சணம். இவர் திட்டம் போட்டு காரியத்தை ஆரம்பிப்ப

தற்கு முன்னே; மக்கள் திண்டாடிச் சாகவேண்டியதுதான்போல இருக்குது......''

"ஒருவரும் பட்டினியாலே சாக மாட்டார்கள் என்று மந்திரிகள் பேசுகிருர்கள்...''

"பட்டினிகிடந்து பட்டுன்னு கீழே சுருண்டுவிழுந்து செத்தா தானு சாவு. கால்பட்டினி, அரைப் பட்டினி கிடந்துகிடந்து, குடல் ஒட்டிப்போய், வலிவு இழந்துபோனு, மனஷாள் குமுறிக் குமுறிச் சாக மாட்டாளோ. வலிவு குறையற போது ஏதாவது ஒரு நோய் நொடி வந்தா, தாங்கிக்கொள்ளுகிற சக்தி இருக்குமா......மங்கி மடிந்துபோக மாட்டார்களா......''

"நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே, மக்களுக்கு ஒரு நோயும் வராதபடி பாதுகாப்புத் தரப்போகிருர்களாம்...''

"சொல்ருளா! சொல்லுவா பொன்னி! சொல்லுவா. ' முன்னே சொன்னதெல்லாம் என்ன ஆச்சு என்று கேட்கிற தைரியம் மக்களுக்கு வருகிறவரையிலே, எதை வேண்டுமானுலும் சொல்லிக் கொண்டுதான் இருப்பா ஆட்சியிலே உள்ளவா...''

"என்னதான் பரிகாரம்னு தெரியவில்லே பொன்னி!''

"ஒரு பரிகாரம் இருக்குது', ஆனு அதற்கு தெய்வத்தின் துணை வேண்டும்...''

'தெய்வத்துக்கு என்னடிம்மா புதுசா வேலே கொடுக்கறே''

"பெரியவேலே ஒன்றுமில்லே ஏமு! வாயில்லாதபடி மக்களேப் படைக்க வேண்டும், பகவான். வாய்னு ஒண்ணு இருப்பதால்தானே சாப்பிட வேண்டி வருது. அதனுலேதானே உணவு நெருக்கடி......''

"நல்லா இருக்குது பொன்னி! உன்னேட அகடவிகடம்...வாயில்லாத ஜென்மமாகணுமா, மக்களெல்லாம...''

"முடியாதுன்னு நினைக்கரறியா ஏமு! அப்படின்னு உனக்கு வரருசி கதை தெரியாதுபோல இருக்குது.''

"அதென்னடிம்மா வரருசி கதை',

"கதைன்னு, இந்தக் காலத்திலே யாரோ எழுதினது என்று எண்ணிக் கொள்கிறயா. அப்படி இல்லே ஏமு! இது புராணம்...''

"பொன்னி புராணக்கதை சொல்லவந்தா அதிலே ஏதாவது பாடம் இருக்கும் ஏமு! பொன்னி! என்னது அது வரருசி.''

"மலேயாள நாட்டிலே ஏமு! வாயில்லாத சாமி கோயிலே ஒண்ணு இருக்குது, செரியுமா? அதாவது அந்த சாமி சிலேக்கு வாய் கிடையாது. உடம்பு கைகால், கண் மூக்கு, காது எல்லாம் உண்டு; வாய் மட்டும் கிடையாது...''

"இது என்னடி அதிசயம்! வாயே கிடையாதா...''

"ஆமாம். அதைப் புரிந்து கொள்ள வேண்டுமானு, வரருசி கதை தெரியணும். வாருசி என்பவர் ஒரு பக்திமான்; பழய காலத்திலே நடந்த கதை; வாருசி ஒரு ஆதித் திராவிடப் பெண்ணேக் கலியாணம் செய்துகொண்டார்.''

"ஜாதி பேதம் கிடையாதா அவர் காலத்திலே...''

"அது தெரியவில்லே. ஆனு காதலுக்குக் கண் இல்லே அல்லவா, அதுதான் காரணம் என்று வைத்துக்கொள்ளேன் வரருசி ஒரு தீண்டாதார் வீட்டுப் பெண்ணே மணம் செய்துகொண்டதற்கு ஊரே அவரை வெறுத்தது. அலேந்து கொண்டிருந்தார் மனேவியோடு ஊர் ஊராக, பனிரண்டு குழந்தைகள் பிறந்தன...''

"பகவானேட வேடிக்கையான சோதனேயைப் பாரேன். பராரிபோல அலேகிறவருக்கு 12 குழந்தைகள் பாவம். அத்தனே பெரிய குடும்பத்தை வைத்துக்கொண்டு என்ன பாடுபட்டாரோ, அந்த வரருசி''

ஒருபாடும் படவில்லே ஏமு! குழந்தைகளே அவர் வைத்துக்கொண்டிருந்தால்தானே பாடுபடவேண்டி நேரிடும். பிறக்கிற குழந்தை ஒவ்வொன்றையும், அங்கே அங்கேயே விட்டுவிடச் சொன்னுர் தர்ம பத்தினியை. அவள் கலங்கியபோது சொன்னுர், வாய்கொடுத்த வல்லவன் வயற்றுக்குச் சோறும் கொடுத்து காப்பாற்றுவான் என்று.''

"என்ன கதியாச்சோ அந்த 12 பிள்ளேகளும்...''

"அது தெரியாது ஏமு! கடைசியாக ஒரு குழந்தை பிறந்தது, பதிமூன்ருவது...''

"பெற்றெடுத்த ஒவ்வொரு குழந்தையையும் விட்டுவிட்ட தாயின் மனம் என்ன வேதனே அடைந்திருக்கும், பாவம்...''

"அந்தப் புண்யவதிக்கு வேதனே ஏற்படவில்லே ஏமு! அந்த பதிமூன்ருவது குழந்தையை மட்டும், நீயே வளர்க்கலாம் நம்மோடேயே அந்தக் குழந்தைஇருக்கலாம் என்று வரருசி உத்திரவு கொடுத்தார்...''

"அப்படிப்பட்ட கல்மனம் படைத்தவருக்கும், அவளுடைய துக்கத்தைப் பார்த்துப் பார்த்து மனம் இளகிவிட்டது என்று சொல்லு...''

"அது அல்ல காரணம். குழந்தைகளே வைத்துக் காப்பாற்றமுடியாது என்றுதானே 12 குழந்தைகளேயும் பிறந்த இடத்திலேயே விட்டுவிடச் சொன்னுர். இந்தக் குழந்தையைப் பொறுத்தமட்டில் அந்தக் கவலே இல்லே, ஏன் தெரியுமோ? அந்தக் குழந்தைக்கு வாயேஇல்லே! வாயிருந்தால்தானே சாப்பிடவேண்டும். சாப்பிடவேண்டியது இருந்தால்தானே, சங்கடம்.''

"இது என்னடி அதிசயம்...வாயே இல்லேயா அந்தக் குழந்தைக்கு...''

"ஆமாம் ஏமு! அந்த ஐதீகத்தை ஒட்டித்தான், இப்போதுகூட கேரளத்தில் ஒரு வாயில்லாத சாமி கோயில் இருக்கிறது. வரருசியைக் காப்பாற்ற பகவான், அவருக்கு வாயில்லாத குழந்தை பிறக்கும்படிச் செய்ததுபோல, காங்கிரஸ் மந்திரிகளேக் காப்பாற்ற, இனிப் பிறக்கும் குழந்தைகள் வாயில்லாததுகளாகப் பிறந்தால் நன்ருக இருக்குமல்லவா...''

"போக்கிரிடி பொன்னி! காங்கிரஸ் மந்திரிகளேக் கேலி செய்ய இப்படி ஒரு கதை கட்டினயா...''

"சேச்சே! கதை நான் கட்டினது அல்ல. படித்தது; சேரள நாட்டுத் தலேவர் ஒருவர் இதுபற்றி சில நாட்களுக்கு முன்பு பேசினது. பத்திரிகையிலே வந்தது அதை வைத்துக் கொண்டுதான் சொன்னேன்.''

"கதை எல்லாம் கிடக்கட்டும் பொன்னி! இந்த அரிசிப் பஞ்சம் போயாக வேண்டும் அதற்கு வழி கண்டு பிடித்தாகவேண்டும் என்று மந்திரிகளே வற்புறுத்த வேண்டும்,''

"நாமா? சரிதான்! ஏன் அர்ஜுனன் கதியாகணுமா மேலும் பலர்... அதிலும் பெண்கள்..."

"பட்டு! நீ சொல்வதுபோல எல்லோருமே பயந்துபோய்விடமாட்டார்கள். போன வாரத்திலே, கர்நாடகத்திலே ஒரு ஊரில், ஆயிரம் பெண்கள் கிளம்பி ஊர்வலமாகச் சென்றார்களாம், உணவு கொடு! உணவு கொடு! என்று கூச்சலிட்டபடி, உணவு மந்திரி வீட்டுக்கு..."

"உணவு மந்திரி என்ன சொன்னார்?"

"அவர் வீட்டில் இருந்தால்தானே எதையாவது சொல்ல..."

"வீட்டில் இல்லையா......கெட்டிக்கார ஆசாமிதான்...சரி...பிறகு..."

"பிறகு, போலீஸ் வந்தது; பெண்கள் முறையிட்டார்கள்; போலீஸ் அதிகாரி, எங்கெங்கோ அலைந்து, அரிசி கொண்டுவந்து ஆளுக்குக் கொஞ்சம் கொடுத்துச் சமாதானப் படுத்தி பெண்களை அனுப்பிவைத்தாராம்..."

"இப்படியே நிலைமை நீடித்தால் என்ன ஆகுமோ என்று ஒரே பயமாக இருக்கு, இல்லையா பொன்னி!"

"இந்தப் பயத்தோடு இப்ப வேறே ஒரு பயமும் சேர்ந்திருக்குதே ஏமு! சீனுக்காரன் இருக்கானே அவன் அணுகுண்டும் தயாரித்துவிட்டானாம்..."

"அந்த அக்ரமக்காரனிடம் அணுகுண்டும் வந்துவிட்டதா. என்ன செய்வானோ, படுபாவி."

"யாரை ஏமு! வாய்க்கு வந்தபடி திட்டிக்கொண்டு இருக்கறே..."

"பொன்னி! பூனைபோல ஓசைப் படாமல் வந்திருக்கார் பார்த்தயா, உங்க அண்ணு."

"யாரு, பொன்னியா! அட ஏன், ஏன், நான் வந்த உடனே புறப்பட்டு விட்டே பொன்னி..."

"கொஞ்சம் வேலை இருக்குது' வா, பட்டு. வர்ரோம் ஏமு!"

ஐ. நா. அவை

மூன்ருவது உலகப் போர் நடைபெறுமானுல், அதில் எத்தகைய போர்க் கருவிகள் பயன்படுத்தப் படும்?' என்று விஞ்ஞான மேதை ஐன்ஸ்டீனிடம் கேட்டதாகவும், அதற்கு அவர், "மூன்ருவது உலகப் போரில் என்ன கருவிகளைப் பயன்படுத்துவார்களோ, அது எனக்குத் தெரியாது. வில்லும் அம்புமே நான்காவது உலகப் போரில் கருவிகளாக இருக்கும் என்பது மட்டும் தெரியும்.'' என்று கூறியதாகவும் சொல்வர். இந்த விடையில், அம்மேதை மூன்ரும் உலகப் போர் என்று ஒன்று நடைபெறுமாயின், அதில் உலகம் அழிந்தொழிந்து, மக்கள் காலமெல்லாம் முயன்று பாடுபட்டு வளர்த்துள்ள நாகரிகமும் நசித்துவிடும் என்பதை உணர்த்தியுள்ளார். நாடுகளின் தலைவர்கள் பலர் இதனை நன்கு உணர்ந்துள்ளனர். எனவேதான் எத்துணையோ நெருக்கடிகள் தோன்றிய பின்னும், சலசலப்பும் முணுமுணுப்பும் ஏற்பட்ட பின்னும், இதுவரை போர் என்னும் பொல்லாத நிலை உருவாகவில்லை. இத்தனைக்கும் பத்தாண்டுகளுக்கு முன்னர் இருந்ததைவிட இன்று பல நாடுகளிடம் போர்க் கருவிகள் புதுமை மிக்கவையாயும், விரைந்து விளைவை உண்டுபண்ணுபவையாகவும் இருந்து வருகின்றன. எனினும் போர் தொடங்கும் நிலை இன்றி, ஒவ்வொரு நாடும் அமைதியையே விரும்புகின்றது.

இந்தச் சூழ்நிலை உருவாவதற்கு முக்கிய காரணம்-உலகில் சமாதானம் நிலவுவதற்கு முக்கிய காரணம், ஐக்கிய நாடுகளின் அவை என்ருல் அது மிகையன்று. கருத்து அறிவிக்கும் அரங்கமாக, அறியும் அவையாக அது அமைவதினுல் கருத்து மாற்றம் உடையவர்கள் மனம் திறந்து பேசி, தங்கள் தங்கள் கருத்துக்களைக் கூறி, பிறரைத் திருத்தி, அல்லது தாங்களே திருந்தி அமைதிகாத்து வாழ்வதற்கு அந்த அவை வழி கோலுகின்றது; வாய்ப்பு அளிக்கின்றது.

இதுவரை உலகப்போர் மூளாமைக்கு அத்தகைய கருத்தரங்கம் ஒரு நல்ல காரணம் ஆகும்.

அழிவு ஏற்படாமல் தடுப்பதோடு மட்டும் இன்றி, ஆக்கத்துறையிலும் அதன் பணிகள் பரவி உள்ளன. உலகப் பொருளியல் வளர்ச்சியில் ஐ. நா. அவை காட்டும் பரிவு பல நாடுகளை நல்ல நிலைக்குக் கொண்டு வந்துள்ளது. குழந்தைகள், மகளிர் இவர்களின் வளர்ச்சிக்கும் நல்வாழ்வுக்கும் என்றதோர் பிரிவு ஐ. நா. அவையில் உளது. அது பல நாடுகளில் நல்ல தொண்டுகள் புரிந்து அவர்களை நன்னிலைக்கு உயர்த்தியுள்ளது.

இன்று உலகில் பல்வேறு நாட்டுப் பிரதிநிதிகளும் கூடிப் பேசுவதற்கு ஏற்ற இடமாகவும் நற்செயல்களுக்கு வித்திடும் நிலமாகவும் உள்ளது ஐ. நா. அவையே.

ஐ. நா. அவையால் எந்த அளவுக்குச் செயல்பட முடிகிறது என்பதும் அதன் செயலால் விளையும் வெற்றிகள் எத்தனை என்பதும் ஐ. நா. பொதுச்சபை, சமாதானக் குழு, போன்றவற்றின் முடிபுகளை—தீர்மானங்களை—செயலாக்கும் செயலாளர் கரங்களிலேயே உள்ளன. நடுநிலையாளராகவும், நல்லறிவு படைத்தவராகவும், துணிவும் அஞ்சாமையும் கொண்டவராகவும் அவர் இருந்தால்தான் நன்கு செயல்பட முடியும். அத்தகைய பண்புகளைப் பெற்றவரும், நமது அண்டை நாடாகிய பர்மாவைச் சேர்ந்தவருமாகிய ஊதாண்ட் அவர்களே இப்போது ஐ. நா. அவையின் பொதுச் செயலாளராக இருந்து பணிபுரிகின்ருர்.

19 ஆண்டுகளுக்குமுன் அக்டோபர் 24-ம் நாள் தொடங்கப்பட்ட ஐ. நா. மன்றம் இருபதாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கின்றது. இப்போது ஐ. நா. அவையில் 113 நாடுகள் உறுப்பினர்களாகியுள்ளனர். அம்மன்றத் தலைமை நிலையத்தையும், செயலாளர் ஊதாண்ட் அவர்களின் உருவத்தையும் அட்டையில் காண்பீர். வாழ்க ஐ. நா. அவை!

2-ம் பக்கத் தொடர்ச்சி

எத்தகையது, என்னென்ன அற்புத அற்புதமான திட்டங்களை எல்லாம் நாங்கள் மேற்கொண்டுள்ளோம்; அப்படிப்பட்ட எம்மையா, கேவலம் ஆட்டு இறைச்சித் தொழிலை மேற் கொள்ளச் சொல்வது என்று கூறு வதுபோலிருக்கிறது அவர்களின் கோபத்தைப் பார்க்கும்போது.

உண்மையில், தமக்குப் பிடித்த மானது, தமதுகருத்தின்படி நேர்த்தி யானது என்று ஏதேனும் ஒரு பொருளோ, முறையோ, தொழிலோ திட்டமோ இருந்துவிடுமானால், வேறு ஒருவர் வேறு ஏதேனும் ஒரு பொருள் பற்றியோ, தொழில் குறித்தோ பேசி னால், கோபமாகத்தான் இருக்கும்; கேவலமாகத்தான் தோன்றும்.

வெண்ணெய் காய்ச்சிய நெய்யில் முந்திரிப்பருப்பைப் பதமாக வறுத் தெடுத்துத் தின்றிட உட்காரும் சீமானிடம், சோளப் பொறியை ஒரு தட்டிலிட்டு நீட்டினால், எப்படி இருக்கும்!!

புதிய 'பாக்கார்டு' காரில் ஏறக் கிளம்பிடும் கனவானைப் பார்த்து, நம்ம வண்டியிலேயே போகலாம் வாருங்களேன் என்று கூறி, நம்மு டைய இரட்டை மாட்டு வண்டியைக் காட்டினால், கனவான் என்ன எண்ணுவார்; அப்படி, ஏதேதோ பெரிய பெரிய, நேர்த்திமிக்க, தொழிற் திட்டங்களிலே ஈடுபட் டிருக்கும் காங்கிரசார், நான் அவர் களை இறைச்சித் தொழிற்சாலை நடாத்தச் சொல்லி அழைப்பதாக எண்ணிக்கொண்டு கோபப்படுகிறார் கள்போல இருக்கிறது என்று எண்ணிக்கொண்டு, அவர்கள் அவ் விதமான பெரிய பெரிய, நேர்த்தி மிக்க தொழில்கள் என்னென்ன வற்றிலே சர்க்காரை ஈடுபடுத்தி இருக்கிறார்கள் என்னென்ன புதிய திட்டங்களை மேற்கொள்ள இருக் கிறார்கள் என்பதைக் கண்டறிய முனைந்தேன். ஏனெனில், நான் கூறிய ஆட்டு இறைச்சித் தொழிற் சாலையைக் காட்டிலும், அதிஉன் னதமான, மிகக் கௌரவமான, வேறு தொழில் திட்டங்கள் அவர்க ளிடம் இல்லாமல் அவர்கள் ஆட்டு இறைச்சித்தொழிலை கசாப்புக் கடை என்று கேவலமாகப் பேச முற்பட மாட்டார்கள் அல்லவா!

அதிகமாகக்கூட நான் கஷ்டப் பட வேண்டி வரவில்லை, வெகு எளி தாகவே என்வேலை முடிந்துவிட்டது; அன்று வெளிவந்த 'தினமணி'யில், காங்கிரஸ் அரசு, நாலாவது ஐந் தாண்டுத் திட்டத்தின்போது மேற் கொள்ள இருக்கும் திட்டங்கள் பற் றிய ஒரு குறிப்பு பார்த்தேன்.

அதைப் பார்த்த பிறகுதான் ஏன் நான் கூறிய ஆட்டு இறைச்சித் தொழிற்சாலையை, கசாப்புக் கடை என்று கேவலப்படுத்துகிறார்கள் காங்கிரஸ்காரர்கள் என்பது புரிந் தது; வேறு நேர்த்திமிக்க, மிக்க மதிப்பளிக்கத்தக்க திட்டம் அவர் கள் கைவசம் இருக்கிறது; மிக நேர்த்தியான வேறு திட்டத்திலே அவர்கள் மனதைப் பறிகொடுத்து விட்டிருக்கிறார்கள்; அதனால்தான் அவர்களுக்கு ஆட்டு இறைச்சித் தொழில், கசாப்புக்கடை என்று கூறிக் கேலி செய்யத்தக்கதாகத் தோன்றுகிறது.

அவர்களின் மனம் இப்படி ஒரு திட்டத்தின் மீது சென்றுவிட்டிருக் கிறது என்பது எனக்கு முன்னதா கத் தெரியாமல் போய்விட்டதற்காக உள்ளபடி வருந்துகிறேன்.

ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு பொருளில், தொழிலில், முறையில், விருப்பமும் மதிப்பும், பற்றும் பாச மும் ஏற்படுவது சகஜம். எனக்கு மதிப்பாகத் தோன்றிடும் ஒரு பொருளோ, முறையோ, தொழிலோ இன்னொருவருக்கு மதிப்பானதாகத் தோன்றாமல் இருக்கலாம். தவறு இல்லை.

கசாப்புக்கடைத் திட்டம் என்று கேவலப்படுத்தப்படும் திட்டம்போல அல்லாமல், நேர்த்தியான மிக்க மதிப்பளிக்கத்தக்க வேறு திட்டம் மேற்கொள்ள இருக்கிறார்கள் என்று கண்டறிந்துகொண்டேன் என்கி றேனே, என்னதிட்டம் அது, என்று அறிந்துகொள்ள ஆவல் எழுகிறது அல்லவா! கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள்; கூறுகிறேன்.

இறைச்சித் தொழில் கேவல மானது, அதிலும் ஒரு பெரிய அரசு மேற்கொள்ளத்தக்கது அல்ல அத் தகைய தொழில், என்ற அடிப்படை எண்ணத்திலேதான் அவர்கள் கேலி பேசுகிறார்கள்.

கற்பூரக்கடை வைத்திருக்கிறேன் என்றுகூற த் தயக்கம் எழுவதில்லை; கருவாட்டுக்கடை நடத்துகிறேன் என்று கூறும்போது ஒருவிதமான கூச்சம் எழக்கூடும்; ஏனெனில் கற் பூரம் மதிப்பான, உயர்வான பொருள்; கருவாடு கேவலமான பொருள் என்பது பொதுவான கருத்து.

ஆனால் பீடிக்கடை வைத்திருக் கிறேன் என்று சொல்லக் கூச்சப் படுவதைப் பார்த்திடும் நாமே பார்க் கிறோம் அதே பொருளை மிகப்பெரிய அளவில் தயாரித்து விற்பனை நடாத் தும் தொழிலதிபர்கள் தம்மை 'பீடிச் சக்ரவர்த்தி' என்று பெரு மிதத்துடன் கூறிக்கொள்வதை.

எனவேதான் நான், பெரிய அள வில் ஆட்டு இறைச்சி தொழிற்சாலை நடத்துவது, கூச்சப்படத்தக்கது அல்ல, கேவலமானது அல்ல என்று எண்ணினேன்; கூறினேன். ஆனால் இப்போதுதான் புரிகிறது காங்கிரஸ் அரசு, மிகஉன்னதமான வேறு பொருளின் மீது, மிக்க மதிப் பளிக்கத்தக்க வேறு தொழிலின் மீது நாட்டம் கொண்டிருக்கிறது என்பது.

அரசுக் கட்டிலில் அமர்ந்திருக்கும் பெரியவர்களை ஆடு வளர்த்து, இறைச்சித் தொழிற்சாலை நடத்தச் சொல்ல முற்படலாமா; அவர்களின் அந்தஸ்து எப்படிப்பட்டது, நிலை எவ்வளவு உயர்ந்தது; நினைப்பு என்னென்ன உயர்தரமான திட்டங் களிலே பதிந்திருக்கிறது! அதனை அறியாமல், அரசாள்வோர் முன் ஆடு கொண்டுபோய் நிறுத்து கிறாயே; அவர்கள் ஆட்டை ஒரு பொருளாக மதிப்பார்களா! ஏறெ டுத்துப் பார்ப்பார்களா! ஏற்றுக் கொள்வார்களா ஆட்டு இறைச்சித் தொழிற்சாலையை! என்றெல்லாம் காங்கிரசின் ஆதரவாளர்கள் பேசிய போது எனக்குச் சங்கடமாகக்கூட இருந்தது. இப்போதுதான் புரிகிறது உண்மையில்; அரசு நடாத்துபவர் கள், வேறு ஒரு தொழிலின மீது நாட்டம் கொண்டுவிட்டிருக்கிறார் கள், என்பது.

ஆ!—ா? என்று கேலியாகக் கேட் டிடும் நிலையில் காங்கிரசார் இருக் கத்தக்கவிதமாக அவர்கள் கொண் டுள்ள மதிப்பு மிக்க தொழில் திட் டம் என்ன? அத்திட்டத்திற்கு அடிப்படையாக அமைந்திருப்பது என்ன? என்கிறீர்கள். ஆச்சரியத் தால் மூர்ச்சையாகாதீர்கள்; ஆத் திரத்தால் வியர்த்துக் கொட்டும் நிலைக்குச் செல்லவேண்டாம் என்று காங்கிரசாருக்கும் சொல்லுங்கள்; ஆடு, அதன் இறைச்சி, இது கேவலம் கேலிக்குரியது என்று

கூறிடும் காங்கிரசார், நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அரசு மேற்கொள்ள வேண்டும் என்று குறித்திருக்கும் தொழிலுக்கு மூலப் பொருளாக அமைந்திருப்பது, ஆடு போன்ற கேவலம் அல்ல, மதிப்பு மிக்க பன்றி! ஆமய்யா ஆம்! பன்றி!!

என் மீது கோபித்துக்கொண்டு என்ன பலன்?

பன்றி வளர்க்கவும், பன்றி இறைச்சி தயாரிக்கவும், நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்பாடு ஆகி இருக்கிறது.

பன்றிப் பண்ணைகள் பல நடத்தப் போகிறார்கள் — ஆம்! ஐயா! ஆம்! ஆட்டு இறைச்சியா விற்கச்சொல்கிறாய் என்று என்னைக் கேட்டிடும், கோபமிக்க காங்கிரஸ்காரர்கள் நடாத்திவரும் அரசு, தீட்டியுள்ள திட்டந்தான், பன்றிப் பண்ணைகள்—பன்றி இறைச்சி தயாரிப்பு—இவை.

பன்றியா...! பன்றிப் பண்ணைகளா! இப்படி ஒரு திட்டமா! இது அரசு அறிவிக்கும் திட்டமா! எமது காங்கிரஸ் அரசு அறிவிக்கும் திட்டமா என்று கேட்டுக்கேட்டு என்னைத் தொல்லைப்படுத்தாதீர்கள் — இதோ 'தினமணி'யில் வெளிவந்துள்ள செய்தி.

"நாட்டில் 14-பன்றி இறைச்சித் தொழிற்சாலைகளை அமைக்க நாலாவது திட்டத்தில் ஏற்பாடு செய்யப்படும்.

இவற்றில் 10-தனியார் துறையிலும் மீதி 4-பொதுத்துறையிலும் இருக்கும்-

பன்றி இறைச்சி தொழிற்சாலைகள் அமையும் இடத்துக்கு அருகே 14-பெரிய பன்றி வளர்ப்புப் பண்ணைகளையும் 140-தீவிர பன்றி அபிவிருத்தி பிளாக்குகளும் அமைக்கப்படும்.

தீவிர பன்றிவளர்ப்புப் பிளாக்குகள் அமைக்கப்படாத இடங்களில் பன்றி வளர்ப்புக்கான 12-சிறிய பண்ணைகளும், 60-பன்றி வளர்ப்புப் பிளாக்குகளும் ஆரம்பிக்கப்படும்.

இது காங்கிரஸ் அரசு, நாலாவது ஐந்தாண்டு திட்டத்துக்காகத் தேர்ந்தெடுத்துள்ள **தொழில் திட்டம்!**

பன்றி வளர்க்கப்போகிறார்கள்! தீவிரமாக!! பெரிய அளவில் பண்ணைகள் அமைக்கப்போகிறார்கள்.

பன்றி இறைச்சித் தொழிற்சாலைகள் நடத்தப்போகிறார்கள்—பெரிய அளவில்.

இப்போது என்ன சொல்கிறீர்கள் — நண்பர்களே! காங்கிரஸ்காரர்களாக இருந்தால் என்ன, நியாயம் என்பது பொதுதானே! நான், ஆட்டு இறைச்சித் தொழிற்சாலை நடத்தலாம் என்று கூறியபோது, சேச்சே! இது ஒரு திட்டமா! இதைச் சொல்பவன் ஒரு அறிஞனா! கசாப்புக்கடை நடத்தச் சொல்பவன் ஒரு கழகம் நடாத்துபவனா! கேட்கச் சகிக்கவில்லையே! மிகக் கேவலமாக இருக்கிறதே! என்றெல்லாம் பேசினவர்கள், இப்போது காங்கிரஸ் அரசு, பன்றிப் பண்ணைகள் நடத்தவும், பன்றி இறைச்சி தயாரிக்கவும் திட்டமிடுகிறது என்று அறிந்துகொள்ளும்போது என்ன சொல்லப் போகிறார்கள்! இது என்னகடை?

ஆட்டு இறைச்சித் தொழிற்சாலை நடாத்துவது கேவலம் என்றால், பன்றி இறைச்சி தயாரிப்பது எப்படிப்பட்டது! புனிதமான, மேலான, மதிப்புமிக்க, தேசியத் தொழிலோ!! விளங்கவில்லையே!!

போகட்டும், பெயரையாவது மாற்றிக்கொள்ளச் சொல்லுங்கள் — பன்றிப் பண்ணை என்பது என்னமோ போல இருக்கிறது — வராக விஹார்! நல்ல பெயர்!! சுலபத்தில் விளங்காது!!

பன்றிக் கறி என்று சொல்லச் சொல்லாதீர்கள்—வராகப் பிரசாதம்—வசீகரமான பெயர்!!

இவர்களுக்கு இந்த அளவுக்குப் பன்றிகளிடம் மனம் இலயித்துப் போயிருக்கிறது என்று தெரியாமற் போய்விட்டது எனக்கு — அதனால் தான் நான் ஆடுபற்றிச் சொன்னேன்! இப்போது தெரிகிறது, பன்றிப் பண்ணைத் திட்டம் பற்றி!

பன்றிப் பண்ணைகள் அமைத்திட எண்ணம் கொண்டவர்களிடம், நானோர் ஏமாளி, கேவலமான ஆட்டு இறைச்சி தயாரிக்கும் திட்டம் பற்றிச் சொன்னேன். பன்றிப் பண்ணைகளைப் பரிபாலிக்க அவர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள்! நேர்த்தியான திட்டம்! மதிப்புமிக்க திட்டம்!!

ஆடு, ஒருகுட்டி இரண்டு குட்டிகள்தான் போடும்! அரசு நடாத்துவோர், பல குட்டிபோடும் பன்றிகளால், ஆடு மூலம் கிடைப்பதைவிட அதிக ஆதாயம் கிடைக்கும் என்பதனை அறிந்திருக்கிறார்கள்.

நம்முடைய நாட்டில் பன்றியை, மிகக் கேவலமாகக் கருதுவார்களே என்பீர்கள் — இருக்கட்டுமே, தொடர்ந்து ஒரு பத்து நாளைக்குப் பேசச் சொன்னால் போகிறது; நாவுக்கரசுகளை—சுவை சொட்டச் சொட்டப் பேசி, பன்றி இறைச்சி என்பது பாகு என்று மக்கள் கருதிடச் செய்கிறார்கள்.

பன்றி இறைச்சி தின்றவர்கள் பார் ஆண்டிருக்கிறார்கள்!

பாவாணர் பலருக்கு முதலடி உதிப்பதே, பன்றி இறைச்சியைச் சுவைத்த பிறகுதான் என்றெல்லாம் பேசிடுவர்!

உலகிலே எங்கெந்த நாடுகளில், எத்தனை எத்தனை அளவு பன்றி இறைச்சி சாப்பிடுகிறார்கள் என்ற புள்ளி விவரம் வேண்டுமா—தருவார்கள்!!

ஆட்டு இறைச்சித் தொழிலை கசாப்புக் கடைத் திட்டம் என்று கேலி பேசினார்களே அதுபோல அல்ல—அது நான் சொன்னது—இது தேசீயத் திட்டம்!!

அண்ணாதுரை.

சின்ன காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "அல்லி" அச்சகத்தில், (உரிமையாளர்) சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.